வரலாற்றுக் களஞ்சியம்

புலவர்
சி. குப்புசாமி



சேகர் பதிப்பகம்

Bibliographical Data

Title	:	VARALATRUK KALANGIYAM
Author	:	Pulavar S. Kuppuswamy
Language	:	Tamil
Edition	:	First
Publication	:	January 1980
Paper used	:	11.6 kg. white Printing
Size	-	Crown (18.0×12.0CM)
Type points	:	11 pt & 10 pt
Pages	:	120
Copies	:	1,200
Printer	:	Moovendhar Achagam, Madras-14
Binding	:	Art Board binding
Publishers	:	SEKAR PATHIPPAGAM
Price	:	Rs. 8-00
Subject	:	Biography
Call Number	:	V 4427 *W*N23 N80

வரலாற்றுக் களஞ்சியம்

பாகூர்
புலவர் சு. குப்புசாமி

சேகர் பதிப்பகம்
புத்தகம் வெளியிடுவோர்—விற்பனையாளர்
66, பெரியார் தெரு,
எம். ஜி. ஆர். நகர், சென்னை-600083

முதற் பதிப்பு
ஜனவரி, 1980

விலை ரூ 8-00

அச்சிட்டோர்
மூவேந்தர் அச்சகம்
சென்னை - 14

பதிப்புரை

புகழ் குவித்த புதுவையின் மாமணியாய் விளங்கிய பெரியார் திருமுடி ந. சேதுராமன் அவர்கள் ஆயிரமாயிரம் அன்பர்களை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு வேலூர் மருத்துவமனையில் 23—12—79 ஞாயிறன்று (பகல் 12-25 மணி) இவ்வுலக வாழ்வை நீத்தார்கள். செந்தீயான இச் செய்தி கேட்டுச் சித்தம் கலங்கிச் செய்வதறியாது தவித்தோர் பலருள் யானும் ஒருவன்.

அவர்களை முதன் முதல் 1975ஆம் ஆண்டில் பார்த்ததிலிருந்து கடைசியாக 7—12—79 வெள்ளியன்று புதுவையில் நல்லாம் மருத்துவமனையில் கண்டது வரையிலும் அவருடன் பழகி மகிழ்ந்த அரிய பல காட்சிகள் கருத்தில் தோன்றி இனிய சுவையைத் தந்தன. முடிவில் அழுத்தமான துயரமும் ஏக்கமும் நெஞ்சில் சுமையாகக் கனத்தது.

அவர்கள் மறைவினால் ஏற்பட்டிருந்த வெறுமையைக் கண்டேன். கதிரவனாக அவர் ஒளி பரப்பிய இடத்தில் காரிருள் சூழ்வதை என் நெஞ்சம் தாங்கமுடியாமல் தவித்தது.

ஒரு சிறு விளக்காவது வைக்கவேண்டும் என்று விரும்பினேன். அவர்தம் ஆற்றல் மிக்க உள்ளொளி என்னுள்ளும் ஊடுருவியிருப்பதால் செயலூக்கம் பெற்றேன்.

திருமுடியார் திறமும் தொண்டும் எல்லார்க்கும் தெரியவேண்டும்; அவர்தம் பண்பாட்டுக் கலை அறிவாற்றல் ஒளிவீச்சு எல்லாருடைய நெஞ்சங்களிலும் பரவிப் படிய வேண்டும்; அதன் விளைவாகப் பல .நல்லார்வ மிக்கவர்கள் உணர்வுப் பிழம்புகளாக, செயல் வீரர்களாக, துறைதோறும் துறைதோறும் துடிப்போடு தொண்டு செய்யும் தொண்டர் களாக வீறுபெற்றுப் புதிய வரலாறு படைத்திடவேண்டும் என்று எண்ணமிட்டேன். அதன் விளைவாக இந்தச் சிறிய புத்தகம் உருவாகியுள்ளது.

திருமுடிப் பெருமகனார்தம் சிறப்பனைத்தும் அறிந்த பெரியவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் அவரைப் போற்றும் வகையில் தக்க செயல்களைச் செய்வார்கள்· ஆனாலும் நான், என்னளவில் வரலாற்றுக் கடமையாகக் கருதி, முதலில் சிறு நூல் உருவில் அவர்கள் புகழைப் பரப்ப முயல்கிறேன். ஒரு வார முயற்சியில் இதனை உருவாக்கி யுள்ளேன். குறுகிய காலத்துக்குள் வெளியிட முயன்றதால் அய்யா அவர்களுடன் நன்கு பழகி அறிந்த பெருமக்கள் பலரையும் பார்க்க இயலவில்லை. பார்க்க முடிந்தவர்களிட மும் கருத்துரைகள் பெற முடியாமல் போய்விட்டது. இது எனக்குப் பெருங்குறையாகவே இருக்கிறது. ஆனால் தொடர்ந்து தக்கவர்கள் சிறப்புற செய்திடுவர் என்று எண்ணி ஆறுதல் கொள்கிறேன்.

நூல் வடிவில், அய்யாவைகற்றவர்நெஞ்சங்கட்டிக்காட்டி அவர் புகழை – திறனை – செயற்பாடுகளை விளங்கச்செய்ய வேண்டும் என்று எண்ணமிட்டதும்‘ அதனைஎழுதித் தருபவர் யார்?’ என்ற கேள்வி பிறந்தது. உடனே பதிலாக எதிரில் இருந்தார் நண்பர் பாகூர் திரு. சு. குப்புசாமி.

அய்யா அவர்களுடன் நெருங்கிப் பழகி அவர் நெஞ்சில் இடம்பெற்ற அன்பு மாணவர் இவர். பாசத்துடன் பிள்ளை யாகவும் தொண்டனாகவும் – ஏன் தோழனாகவும் கூட

இவர் பழகிய நிலைகளை நான் பலமுறை பார்த்திருக் கிறேன். இவரிடம் என் கருத்தைக் கூறினேன். முதலில் தயங்கினார்; பின் இசைந்தார். முடித்துத் தந்தார். மன நிறைவோடு குறிப்புகளைத் திரட்டி மிக விரைவில் எழுதித் தந்தார். இவர் பாராட்டுக்கு உரியவர்.

இப்பணி தொடங்கியதுமுதல் ஆர்வமுடன் உடனிருந்து ஒத்துழைத்த நண்பர்கள் புலவர் ந. வேங்கடேசன், கோ. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரையும் மறக்க முடியாது.

இந்நூற்பணிபற்றி நான் குறிப்பிட்டதும் ஊக்கமூட்டி உதவிய முத்தியால்பேட்டை ப. சண்முக முதலியார் அவர் கட்கும், புதுவை "ஆனந்தா எம்போரியம்" நா. கோவிந்த சாமி அவர்கட்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

வரலாற்றுக் களஞ்சியமாம் திருமுடியாருடன் பழகி யறிந்தவற்றை என் வேண்டுதலுக்கிசைந்து எழுத்துரைகள் தந்து உதவிய மதிப்பிற்குரிய அறிஞர், அன்பர், கவிஞர் அனைவோர்க்கும் என் அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றும் விரைந்து அச்சிட்ட மூவேந்தர் அச்சக உரிமை யாளர் முத்து அவர்களுக்கும் நன்றி.

மறைந்தவர் புகழை நாடறிந்து போற்றிப் பயன்பெற வேண்டுமென விரும்புகிறேன். அன்பர்கள் இந்த அரிய வரலாற்றுக் களஞ்சியம் பெற்று நலம் பரப்புவர் என்று நம்புகிறேன்.

வெ. சுந்தரம்
சேகர் பதிப்பகம்

நிறைந்த புகழாளர் !

புலவர் தமிழவேள்

புதுச்சேரி

கண்டவுடனே 'வாங்க சாமி'யெனும் கற்பகமே
கொண்டனனே உன்னுயிரை கூற்றுவன்தான்
—தண்டமிழைச்
சீரோடு காத்துவந்த சேதுரா மாக்கண்ணில்
நீரோடச் செய்தனையே நீ

நீல மணிமிடற்ருன் நேராய் உனையழைத்துக்
கோல மலரடியிற் கொண்டனனே—ஞானமிசை
உன்னைப் பிரிந்திங்கே உற்ற அறிஞரெலாம்
பன்னிப் புலம்புவதைப் பார்

பாரையா நீவளர்த்த பல்வேறு சங்கத்தை
யாரையா இங்கவற்றை யாதரிப்பார்—போரையா
என்றுவந் தோர்களையும் இன்மொழியா லேமாற்றி
வென்றசேது ராமா விளம்பு

புதுவையிற் கால்வைத்த புலவரெலாம் உன்றன்
மதிநலத்தைக் கண்டு மலைத்தார்—அதிநலம்
பெற்ற திருமுடிப் பேர்விளங்கச் செய்தநீ
உற்றயிடம் ஏதோ உரை

முன்வாயில்

மனிதன் உழைப்பின் சக்தியை மட்டும் பயன்படுத்தினால் போதாது. அந்த உழைப்புடன் தன் எண்ணத்தையும் பயன்படுத்த வேண்டும்.

—இங்கர்சால்

வரலாறு

வரலாறு படைத்தவன் தமிழன். அந்த வரலாறு தமிழ் முதுமக்களின் சமுதாய அமைப்பு, ஆட்சி முறை, நீதிநெறி, கலைவளர்ச்சி, இலக்கியச் சிறப்பு, மொழிவளம் உள்ளிட்ட அனைத்திலும் நம்மை உலகறியச் செய்தது.

நமது வரலாற்றை முதன் முதலில் வெளிநாட்டவர் தாம் நமக்குக் கோடிட்டுக் காட்டினார்கள். அத்தகைய கோடுகள் சரியாக முறையாக வரையப்பட்டவையா என்று நம்மவர்களும் ஆராயத் தலைப்பட்டார்கள். இவர்களில் உண்மை வரலாற்றை உலகுக்கு உணர்த்திய பேரறிவாளர் வெகு சிலரே.

இத்தகைய பேராளரின் வாழ்வே சில நேரங்களில் வரலாறாக மாறியதுண்டு. இந்த வரிசையில் அறிவியல் மேதைகள், வரலாற்று அறிஞர்கள், கலை வல்லுநர்கள், அரசியல் தலைவர்கள், ஆகியோரைக் காண்கிறோம். இவர்கள் உழைப்பின் சக்தியைப்

பயன்படுத்தினார்கள். உழைப்புடன் எண்ணங்களைக் கலந்து சமுதாயத்துக்கு அளித்தார்கள். மனமுள்ள வராக, பண்பாளராக, மனிதராக வாழ்ந்தார்கள்.

ஆகவேதான், தனி மனிதனின் வரலாறும் நாட்டு வரலாற்றைப் போலவே சமுதாய முன்னேற்றத்துக்கு அடிப்படையாய் அமைகின்றது; தடம் மாறிச் செல்வோர்க்குத் தடையாக விளங்கி, நன்னெறியில் செலுத்துகிறது; உள்ளம் தளர்ந்த இடத்து ஊன்று கோலாய் உதவுகிறது.

தனிமனிதரின் வரலாறு சமுதாய முன்னேற்றத்திற்கு முன்னோடியானது என்பதை உறுதிப்படுத்தும் வகையிலமைந்த பெருவாழ்வுக்கு உரியவரின் வரலாற்றை இனிக் காண்போம்.

ஒரு தனிப்பிறவியாளர்

சிவபாத சேகரர், சமூகத் தொண்டர், சீர்திருத்தச் செம்மல், இலக்கிய மேதை, வரலாற்று வல்லுநர், புலவோர்க்குப் புரவலர், கலைஞர்க் காவலர், இசைநுகர் இயல்பினர், மாரி நிகர் வண்மையர், பன்மொழிப் பங்காளர், திறன் மிகு சிந்தனையாளர், இனியவர், அன்பினர் எனும் இத்தனைப் பண்புகளும் ஒருங்கே உருக்கொண்டவர்தாம் புதுவை திருமுடி ந. சேது ராமனார்.

அவர்தம் வாழ்க்கை வரலாறு தனியொரு மனிதரின் வாழ்க்கை வரலாறுதான் என்றாலும், மக்கள் மக்களாக வாழ்வதற்கான அடிப்படைப் பண்புகள் அவர்தம் வாழ்க்கையில் குவிந்து கிடந்தன; அவற்றை வாரிச்சென்று பயனடைந்தோர் பலருண்டு காலம் கடந்து கண்ணீர் வடித்தவரும் உண்டு.

மாமன்னர்களின் அரசியல் வரலாறு. கடந்த காலத்தில் நாம் நடந்து வந்த பாதைதனை அடையாளம் காட்டி, புதிய பாதையைச் செப்பனிடச் செய்தது.

திருமிகு சேதுராமனூர் வரலாறு மனித குலத்துக்குத் தேவையான பண்புக் கோட்டை, அறிவுக் களஞ்சியம். ஆகவேதான், அவர் வரலாறு மனிதர்களுக்கு, மனிதர்களாக வாழ விரும்புவோர்க்கு என்றென்றும் தேவையான ஒன்று.

அவர் உழைப்பின் சக்தியை மட்டுமல்ல, தன் எண்ணங்களையும் பயன்படுத்தி இந் நாட்டுக்குத் தந்தவர். உழைப்பால் அறிவைப் பெருக்கியவர். கல்வியை வளர்த்துக் கொண்டவர். கலைக் கடலாய் விளங்கியவர்.

இயற்கை ஒருபோதும் இவரை ஏமாற்றியதில்லை. அது இவரிடம் பலமுறை ஏமாற்றமடைந்திருக்கிறது.

அண்ணலின் முன்னோர்

"மரம் தனது கனிகளைத் தானே உண்பதில்லை.
தடாகம் தனது நீரைத் தானே குடிப்பதில்லை.
தாம் செல்வத்தைச் சேர்த்துப்
பிறருக்கு யார் கொடுக்கிறார்களோ
அவர்களே பண்புடையவர்கள்."
—நஹீம்

வரலாறு படைத்தவர்கள்

பல்லவர் குலம் விளங்க ஸ்கந்தவர்மன் தோன்றினான். சோழர்குலம் தழைக்க விசையாலயன் பிறந்தான். பாண்டியர் குலம் வளரக் கடுங்கோன் வந்தான். விசயநகரப் பேரரசர்களுக்கு அரியரனும் புக்கரும் உதித்தனர்.

தமிழிலக்கியம் வாழ டாக்டர். உ. வே. சாமிநாதையர் தோன்றினார்.

இவர்களைப் போலவே, திருமுடியார் குலத்துக்கு ஆறுமுகச் செட்டியார் தோன்றினார்.

செட்டியார் பட்டம்

சேனைத்தலைவர் இனத்தவர்க்குச் செட்டியார் என்றொரு பட்டம் உண்டு. செட்டியார் என்ற பட்டப் பெயரையே இவர்கள் வழிவழியாகப் புனைந்து கொண்டனர்.

திருமுடி சேதுராமனாரின் மரபுவழிப் பட்டியல் ஆறுமுகச் செட்டியாரிலிருந்து தொடங்குகிறது இப் பட்டியலில் இவர் எட்டாவது தலைமுறையினர்.

தொடக்க காலத்தில் இவர்தம் முன்னோர் தரங்கம் பாடியில் வாழ்ந்தனர். டச்சுக்காரர்கள் அப்பகுதியில் நிலைபெற்றிருந்தபோது, ஆறுமுகச் செட்டியாரின் வழித் தோன்றல்கள், அவர்களோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.

வாணிகத் தொடர்பு காரணமாக இவர்கள் குடும்பம் செல்வச் செழிப்போடு திகழ்ந்தது. நீலச் சாயம் உற்பத்தி, சாயம் தோய்த்தல், புகையிலை, சோப்பு உற்பத்தி முதலானவை, இவர்கள் மேற்கொண் டிருந்த வாணிகத்தில் முக்கிய இடத்தைப் பெற்றன.

வெளிநாட்டு வாணிகம்

இவர்களின் வாணிகம் மொரிஷியஸ் தீவுக்கும் பரவியது. அங்கே பெருமளவு நன்செய் நிலங்களும் பிறவும் இவர்களுக்கு உடைமையாயின. பண்ணை களில் எண்ணற்றவர்கள் பணியாற்றினர்.

நன்செய் நிலங்களில் பெரும்பாலானவை கரும்புத் தோட்டங்களாகவே காட்சியளித்தன.

பண்ணைகளைக் கண்காணிக்க இருபெரும் மாளி கைகள் கட்டப்பெற்றன. அவற்றில் வெளி நாட்ட வரும் தாங்கிச் சென்றனர்.

சேதுராமனாரின் முன்னோர் எடுப்பித்த மிகப் பெரிய அழகிய சிவன் கோயில் ஒன்று அத்தீவில் இன்றளவும் உள்ளது. அக் கோயில் இவர்தம்

முன்னோரின் சைவப்பற்றுக்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டு.

பிற்காலத்தில் அங்கிருந்த பண்ணைகள் அனைத்தும் "எலியாஸ் மலாக்கா கம்பெனி"க்குக் குத்தகைக்கு விடப்பட்டன.

தமிழ்நாட்டில் தரங்கம்பாடிப் பகுதியில் டச்சுக் காரர்களின் செல்வாக்கு மங்கத் தொடங்கியபோது, புதுவைப் பகுதியில் வாணிகத் தொடர்பை மேற்கொண்டனர். சோப்பு செய்தல், சாயஉற்பத்தி, சாயம் தோய்த்தல், புகையிலை முதலான வாணிகம் இங்குச் சிறப்பாக நடைபெற்றது. பிற்காலத்தில் பிரஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் இவர்களுக்கும் தொடர்பிருந்தது.

புதுவை வாழ்க்கை

இதன் விளைவாக ஆறுமுகச்செட்டியார் மரபினர் இரண்டு கிளைகளாகப் பிரிந்து தரங்கம்பாடியிலும் புதுவையிலுமாக நிலைபெற்றனர்.

புதுவை, படாங்கு நாராயணசாமி செட்டியார் இத்தூய மாபுவழியில் வந்தவர்; கொடையாளர். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனாரின் மாணாக்கரும், டாக்டர் உ. வே. சாமிநாதையரின் ஒரு சாலை மாணாக்கருமாகிய கவி. சவராயலுநாயகர் இச்செட்டியாரைக் கீழ்க்கண்டவாறு பாடினார்.

சீராரும் படாங்குநா ராயணசா
மிப்புனிதசெல்வன் வீட்டில்
பேராரும் பாரதத்துட் பழம்பொருந்துஞ்
சரிதையினற் பெருமிதத்தை

ஏராருஞ் சிறுர்களினு லேதிருவேங்
கடஐய ரினிதாக் காட்டி
பாராரும் பற்பலர்க்கும் பாவசங்கீர்த்
தனமுறையைப் படிப்பித்தாரே!*

திருமுடிவாய்க்கால்

தொடக்க காலத்திலேயே புதுவையில் செல்வச் சிறப்போடு வாழ்ந்து வளர்ந்த இக்குடும்பம், இப்பகுதியில் புகழ் பெற்று மிகப் பெருஞ் செல்வாக்குடன் திகழ்ந்தது.

புதுவைக்கு அண்மையில் உள்ள மிகப் பெரும் ஏரியான உசுட்டேரியிலிருந்து பிரிந்து செல்லும் பாசன வாய்க்கால் ஒன்றுக்குத் திருமுடி வாய்க்கால் என்றே பெயர். அதன் மூலம் பாசனம் பெறும் நிலங்கள் அனைத்தும் இவர் குடும்பத்துக்குச் சொந்தமானவை.

அக்குடும்பத்தில் தோன்றிய நடராச செட்டியார்க்கு குசலாம்பாள் அம்மையின்பால் ஒரு ஆண் மகவு பிறந்தது. ஏறத்தாழ நான்கு ஆண்டுகளுக்குப் பின் அது சிவனடி சேர்ந்தது.

தோற்றம்

நடராச செட்டியாரும், அம்மையாரும் மகப்பேறு வேண்டி இராமேசுவரம் சென்றனர். இராமீசுவரமுடையாரை வழிபட்டனர்.

இறைவன் அருளால், 1923 ஆவது ஆண்டு ஜனவரித் திங்கள் 24 ஆம் நாள் மீண்டும் ஒரு ஆண் மகவு பிறந்தது இராமபிரான் அமைத்த சேது

*Recueil de Chants tamouls, 1904, Page: 364.

அணை இராமேசுவரத்தில் இருப்பதாக ஒரு செவிவழிச் செய்தி உண்டல்லவா? அச்செய்தியின்பால் நம்பிக்கை வைத்த பெற்றோர், அம்மகவுக்கு சேதுஇராமசாமி என்று பெயரிட்டு அழைத்தனர். அப்பெயரே இந்நாளில் சேதுராமன் ஆயிற்று.

ஆறுமுக செட்டியார் மரபில் திருமுடி செட்டியார் என்ற பெயருடன் மூவர் இருந்தனர். ஆதலின், திருமுடி என்னும் பெயர் குடும்பப் பெயராக மாறியது. எனவே, நமது உள்ளங்கவர் வள்ளல், திருமுடி ந. சேதுராமனர் என்று அன்போடு அனைவராலும் அழைக்கப் பெற்றார்.

இவருக்குப் பின் தம்பியாக வேல்முருகனும், தங்கையாக இராசாம்பாளும் பிறந்தனர்.

புதுவை ஆனந்தரங்கப்பிள்ளை வீதியில் திகழும் நடராச செட்டியாரின் பேரில்லம் கலைமகளும் திருமகளும் ஒருங்கே நடம்புரியும் அரங்கமல்லவா! அங்கே சேதுராமனர் சீரும் சிறப்போடும் வளர்ந்ததிலே வியப்பில்லை!

இளமைக்கால முதறிவு

"வாழ்நாளில் இனிய பருவம் இளமை.
இதை நாம் முதுமையில்தான் உணர்கிறோம்.
—கிரேடர்

சேதுராமனார் தக்க பருவத்தில் தொடக்கப் பள்ளி பயின்றார். இவரின் இளமைப் பருவம் மிகவும் துடுக்கான பருவம். உறுதியான நீண்ட கம்பியின் ஒரு முனையைக் கொக்கி போல வளைத்து, விரைந்தோடும் காரின் பின் பகுதியில் அதனை மாட்டி, மறு முனையை இழுத்துப் பிடித்து நிறுத்துவதற்கு முயற்சி செய்த சிறுவன் சேதுராமனுக்கு வீர விளையாட்டுகளே விருப்பமானவை.

இளமையில் ஆர்வம்

கட்டுப்பாடுள்ள பள்ளி வாழ்க்கை அவர் உள்ளத்தைக் கவரவில்லை. ஏதோ ஒரு ஏமாற்று உணர்ச்சி. பள்ளிக் கல்வி தடை பட்டது. விளையாட்டில் விருப்பம் மிகுந்தது.

உடல் உரத்துக்கும் உள்ள வலிமைக்கும் இவர் தேர்ந்தெடுத்த விளையாட்டுகள் துணை நின்றன. குத்துச் சண்டை உள்ளிட்ட பாதுகாப்புக் கலைகள் யாவும் இவருக்குக் கை வந்த கலைகள்; மேலும், விதம் விதமாக வேடம் புனைந்து கொள்வதில் இவருக்கு ஆசை அதிகம்.

இவர் கல்வியின் அருமையை உணர்ந்தவர். அதற்கான் பருவம் இளமைக் காலம் என்பதையும் அறிந்தவர்; எனவே, கல்வியைத் தாமே தொடர்ந்து கற்ருர்; பட்டறிவு இவருக்கு மிகுதியான பாடங்களைக் கற்றுத் தந்தது.

பழுமரம் நாடிச் செல்லும் பறவையானுர். துறவி போல் தனித்திருந்து தன் எண்ணங்களை, உள்ளார்ந்த சிந்தனை ஆற்றலை, ஆன்மிகத்தை வளர்த்துக் கொண்டார்.

வாழ்நாளின் இனிய இளமைப் பருவத்திலேயே இவர் முதுமைக்காலப் பேரறிவை—பட்டறிவை ஒருங்கே பெற்ருர்.

பல மொழிகள் பயிலல்

பிரெஞ்சு, ஆங்கிலம், சமஸ்கிருதம், உருது, தெலுங்கு, இந்தி முதலான மொழிகளைக் கற்றிருந்த இவர், சமஸ்கிருதத்திலுள்ள அருமையான சாத்திரங்களையும் இன்னபிற இலக்கியங்களையும் ஊன்றிக் கற்று அத்துறையில் தனித் தன்மை பெற்று விளங்கினுர்.

குறிப்பாகப் பிரெஞ்சு மொழி இலக்கியங்களும், இங்கிலாந்தின் வரலாறும் இவர் உள்ளத்தை உருகச் செய்தன.

உழைப்பின் பயனுய்ப் பன்மொழி இலக்கிய அறிவு பெற்று, அறிஞர்களின் ஒத்த கருத்தோட்டங்களை ஒப்பிட்டுப் பார்த்து, அவற்ருேடு தம் எண்ணங்களைக் கலந்து, தம் நண்பர்களுக்கு வழங்குவதில் இவர் அவ்வப்போது மனநிறைவு பெற்ருர்.

பல திறப்பட்ட அறிஞர்களை இவர் நாடிச் சென்றார். அறிஞர்களும் இவரைத் தேடி வந்தனர். இவை இரண்டும் அவர் இறுதிக் காலம்வரைத் தொடர்ந்து நடைபெற்றன. பன்மொழி அறிவு இவருக்குப் பலவகையிலும் பயன்பட்டது.

தோற்றப் பொலிவு

ஆறடி உயரம்—அதற்கேற்ற பருமன்; நேரு காமராசரைப் போல் நீண்ட கைகள்; பருத்த பிடரி; கூர்ந்த மதியையும் அறிவின் ஆழ்ந்த தெளிவையும் காட்டும் அழகிய திருமுகம்; நிமிர்ந்த நடை; நேரான நேர்மையான பார்வை! இவை எல்லாம் அவர்தம் இயல்பான தோற்றங்கள். அவருடைய தலை என்றுமே தாழாத் தலை. அவர் தலைகுனிந்ததை இதுவரை யாருமே பார்த்திருக்க முடியாது.

வெண்ணீறு அவர் நெற்றியை அலங்கரிக்கும்; உருத்திராட்சை மாலை கழுத்தை அணி செய்யும்; கருணை அவர் கண்களில் கலந்திருக்கும்; அன்பும் இனிமையும் அவர் பேச்சில் இழையோடும்; பாசம் அவர் நெஞ்சில் குடிஇருக்கும். அனைத்து நற்பண்புகளும் அவரிடம் அடைக்கலம் புகுந்தன.

இனிய கனவு காணும் இளம் பருவம், நீரில் தோன்றும் 'குமிழி போன்றதுதான்; ஆயினும், இவர் கனவை நினைவாக்கியவர். குமிழியை நிலைக்கச் செய்தவர்.

இவர்தம் குலம் விளங்க துணைவியார் தெரேஸ் அம்மையின்பால், இவருக்கு அசோக்குமார், அருண் என்னும் இருமக்கள் உளர்,

கலை வளர்த்த காவலன்

சரித்திரத் தொடர்புகளே இலக்கியத்தின்
எதிர் காலத்தைத் தீர்மானிக்க வல்லன.
—டி. எஸ். எலியட்

அருங்கலை வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பணிகள் ஏராளம். சொலல் வல்ல இவர், எப்பொழுதுமே சோர் வற்றவர். சிறந்த சொற்பொழிவாளர். இவர் தம் ஒவ்வொரு பேச்சும் ஒரு வரலாறு.

பேச்சின் இடையிடையே சரித்திரச் சான்றுகளை விரித்துரைக்கும்போது, அவை நம்மைக் கடந்த காலத்துக்கு அழைத்துச் செல்லும்; சிற்றூரில் பேசும் போதுகூட அந்த ஊரின் வரலாற்றைச் சொல்லி, பெருமையைப் பேசி, ஊர் மக்களின் வழி வழிச் சீர்மையைச் சொல்லி கிளர்ந்தெழச் செய்திடுவார்.

வரலாற்றை இலக்கியமாகப் பேசிடும் ஆற்றல் படைத்தவர் இவர். வரலாற்றுத் துறைக்கு, குறிப் பாகப் புதுவைப் பகுதியின் முற்கால தற்கால வரலாறுகள் வெளிப்படுதற்கு இவர் ஆற்றியுள்ள அரும் பணிகள் எண்ணில் அடங்கா.

புதுவை வரலாற்றுக் கழகம்

பேரறிஞர் கபிரியேல் ழூவோ துப்ராய் என்பவர் பிரெஞ்சு நாட்டுப் பேராசிரியர். இவர்தாம் பல்லவர் வரலாற்றை உலகத்தின் கவனத்துக்குக் கொண்டு

வந்த முதன்மையாளர். முட்புதர்களுக்கிடையே மறைந்து கிடந்த மாமல்லபுரக் கலைக் கோயில்களை உலகறியச் செய்தவரும் இவரே.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கும் முற்பட்ட சித்தன்ன வாசல், காஞ்சிபுரம் வண்ண ஓவியங்களின் மேம்பாட்டைக் கண்டு பிடித்துச் சொன்னவரும் இவரே. இத்தகைய அறிவாளர் புதுவை வரலாற்றுக் கழகத்துக்கு அழியாப் புகழ் தேடினார்.

1911ஆவது ஆண்டிலே உருவாக்கப் பெற்ற அக் கழகம் 1963 வரைப் பயனுள்ள பற்பல பணிகளைச் செய்தது. இக்கழகத்தோடு ஒன்றியிருந்த துப்ராய் ஏராளமான நூல்களை வெளியிட்டார். அவை தென்னிந்திய வரலாற்றுக்கு ஒளிவிளக்காய்த் திகழ் கின்றன.

இக்கழகத்தின் வாயிலாக வெளி வந்த "Revue Historique" என்னும் இதழ்கள் உலகமெங்கும் குறிப்பாக ஐரோப்பாவில் தென்னிந்தியாவின் பழமை வரலாற்றைப் பறை சாற்றின. வெளிநாட்டவர் நம் நாட்டின் வரலாற்றை ஆராய்ந்தறிய இவை தூண்டு கோலாய் உதவின.

பிற்காலத்தில் இக்கழகம் முற்றிலும் செயலற்று மறைந்தது. வரலாறே உருக் கொண்டெழுந்த நம் சேதுராமனார், மீண்டும் அக்கழகத்தை உயிர்த்தெழச் செய்தார்.

இவர்தம் பெருமுயற்சியின் விளைவாக இக்கழகம் 1971 இல் மீண்டும் செயல்படத் தொடங்கியது. 1972 முதல் தாமே அக்கழகத்துக்குப் பொருத்தமான தலைவராய் இருந்து வழி நடத்திச் சென்றார்.

புதுவை வரலாற்றுக் கழகத்தின் செயலராக திரு சிரில் ஆண்டனி பொறுப்பேற்றார். தலைவரும் செயலரும் கருத்தொருமித்து காரியமாற்றினர். நெஞ்சார்ந்த ஆர்வத்துடன் அவர்கள் நீண்ட நெடும் வரலாற்று நோக்குடன் நல்ல பல திட்டங்களைத் தீட்டினர். முறையாகச் செயல்பட்டனர். இக்கழகத்தில் என்னையும் பங்கு பெறச் செய்தார் என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

இவர் காலத்தில்; **10, 11, 12** ஆகிய மூன்று **Revue Historique''** தொகுதிகள் **(1972-75)** வெளி வந்தன.

திரு ழுவோய் துப்ராய் அவர்கள், பிரெஞ்சு மொழியில் எழுதிய அரிய வரலாற்றுக் கட்டுரைகள் திரு ரா. தேசிகம் பிள்ளை அவர்களால் தமிழாக்கம் செய்யப் பெற்று,''வரலாற்றில் புதுவை'' என்னும் பெயருடன் வெளிவந்தது.

புதுவைப் பகுதியின் கல்வெட்டுக்களை ஆராய்ந்து நான் எழுதிய வரலாற்று நூல் ''கல்வெட்டுகளில் புதுவைப் பகுதிகள் என்னும் பெயர் தாங்கி வெளி வந்தது. தொடர்ந்து இன்னும் பல நூல்கள் வெளிவர உள்ளன.

பிரெஞ்சு இந்தியக் கலைக்கழகம்

French Institute of Indology—Pondicherry.

பிரஞ்சு நாட்டு அரசு இந்திய இயலை ஆராயும் பொருட்டு, புதுவையில் ஒரு கலைக்கழகத்தை நிறுவியது. பிரெஞ்சு நாட்டுப் பேராசிரியப் பெருந்தகை திரு ஜான் பிலியோசா, பேராசிரியர் ழுவோ துப்ராய் அவர்களின் தொண்டர் P. Z. பட்டாபிராமச் செட்டியார், நமது சேதுராமனுர் ஆகியோர் **1955** ஆவது

ஆண்டு மார்ச்சுத் திங்களில் இக்கலைக் கழகத்தைத் தொடங்கினார்கள்.

செட்டியார் அவர்கள் அன்பளிப்பாகத் தந்த பல அரிய புத்தகங்கள், அலமாரி, விநாயகர் முதலான படங்களைக்கொண்டே இக்கலைக் கழகம் முதன் முதலாகத் தோற்றுவிக்கப்பெற்றது. அதனைத் தொடக்கி வைத்ததோடு தமது பணி முடிந்துவிட்டதாக இவர் நினைக்கவில்லை. அதன் வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். ஆயிரக்கணக்கான ஓலைச் சுவடிகளை இவர்தம் பெருமுயற்சியால் இக்கலைக் கழகம் பெற்றது. அவற்றுள் தமிழ்ச் சுவடிகளும் சமஸ்கிருதச் சுவடிகளும் அடங்கும்.

மாபெரும் பணிகள்

இக் கழகத்தின் சார்பில் புதுவைக்கு மேற்கே உள்ள "திருவாண்டார்க் கோயில்" என்னும் ஊரிலுள்ள சிவன் கோயிலும், மதகடிப்பட்டு என்னும் ஊரிலுள்ள இராஜராஜ சோழன் கட்டிய கோயிலும், காரைக்காலுக்கு அண்மையில் உள்ள சேத்தூர்ச் சிவன் கோயிலும் அவற்றின் பழைய அமைப்புக் குலையாதவாறு செப்பனிடப்படப் பாடுபட்டார்; இப்பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

தமிழ் நாடெங்கும் உள்ள திருக்கோயில்களில் காணப்பெறும் செப்புத் திருமேனிகளையும், கலைநுட்பம் வாய்ந்த அழகிய வேலைப்பாடு கொண்ட சிற்பங்களையும் இக்கழகம் நிழற்படம் எடுத்துச் சேர்த்து வைக்கத் தொடங்கியபோது திருமுடியார் முன்னின்று உதவினார்.

நிலையத்தின் சிறப்பு

இந்நாளில் இக்கலைக் கழகம் உலகெங்கும் புகழ் பெற்று விளங்குகிறது. அரிதான பல நூல்களைக் கொண்ட மிகப் பெரிய நூல் நிலையம் இங்கே உண்டு. ஆயிரக் கணக்கான பழைய ஓலைச் சுவடிகள் இங்கு சேர்த்து வைக்கப்பெற்றுள்ளன. இலட்சக்கணக்கான நிழற் படங்களும் உண்டு.

உலகின் எல்லாத் திக்கிலிருந்தும் ஆய்வாளர்கள் இக்கழகத்தை நாடி வருகின்றனர்.

நூற்றுக்கணக்கான அரிய நூல்கள் இதன் வாயிலாக வெளிவந்துள்ளன.

ஆகம வெளியீடுகளை இக்கழகம் தமது தலையாய பணியாக ஏற்றுக் கொண்டுள்ளது.

இக்கழகத்தின் பணியை—வளர்ச்சியை நினைக்கும் போதெல்லாம், புகழாளர் செட்டியார் அவர்களை நினைத்துப் பூரிப்படைகிறோம்.

அகழ்வாராய்ச்சி

புதுவைக்கு அண்மையில் உள்ள அரிக்கமேட்டில் திரு மார்ட்டிமர்வீலர் முறையான அகழ்வாராய்ச்சி செய்தபோது, அவருக்கு உடனிருந்து உதவிய தொல் பொருள் ஆய்வாளர்களில் பெரும்பாலோர் செட்டி யாரின் இல்லத்திலேதான் தங்கினார்கள்.

அவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளும் செய்தளித்தார்கள். இதன் விளைவாக அரிக்கமேட்டு அகழ்வாராய்ச்சி பற்றி மிகத் தெளிவாக அறிந்து கொள்ளும் வாய்ப்பும், நேரில் தெரிந்து கொள்ளும் வாய்ப்பும் இவருக்குக் கிட்டின.

எனவே, அரிக்கமேடுபற்றி அறிய விரும்புவார்க்கு இவர் ஆசானாக விளங்கினார்.

அரும்பொருட் காட்சிக்கூடம்

புதுவை மாநிலத்துக்கென்று ஒரு அரும் பொருள் காட்சிக்கூடம் அமைந்திட வேண்டும் என்று இவர் எண்ணியவாறு இருந்தார். புதுவைப் பகுதியில் பல சமயங்களில் கிடைத்த அரிய பொருட்களைக் கொண்டு, புதுவையில் ஓர் அரும்பொருட் காட்சிக் கூடம் அமைய வேண்டும் என்ற தமது கோரிக் கையை அரசுக்கு அவ்வப்போது தெரிவித்து வந்தார். அரசும் முன்வந்து செயல்பட்டது. காட்சிக்கூடம் உருவாயிற்று.

அண்மைக் காலத்தில் புதுவையில் உருவாகிய இக்காட்சிக்கூடத்துக்குத் தம்மிடமிருந்த அரிய பல கலைச் செல்வங்களை வாரி வழங்கினார்.

மாதூர் மாடக் கோயிலைச் சார்ந்த சிற்பங்கள் இக்கலைக கூடத்தில் இடம் பெறுவதற்கு இவரே காரணம்.

இவ்வரும்பொருட் காட்சிக் கூடத்தின் வளர்ச்சிக் காக அரசினரால் நிறுவப்பட்ட ஆலோசனைக் குழுவில் இவர் முக்கிய இடத்தைப் பெற்றார்.

சென்னையிலுள்ள அரும்பொருட் காட்சிக்கூடத் துக்குத் தன்னிடமிருந்த மதிப்புமிக்க கலைச் செல் வங்களை வழங்கினார்.

இந்தியப் பெருநாட்டின் வேறு பகுதிகளில் உள்ள அரும்பொருட் காட்சிக்கூடங்களிலும் இவருடைய கலைக் கருவூலங்களைக் காணலாம்.

சில அன்பர்கள்கூட இவரிடம் அரிய கலைச் செல்வங்களைப் பெற்றுச் சென்றனர்.

ரோம் நகரில் போப்பாண்டவருக்குச் சொந்தமான அரும்பொருட் காட்சிக்கூடங்களில், இந்தியப் பொருட்கள் பெருவாரியாக இடம் பெற்றிருப்பதைப் பற்றி வியப்போடு பேசிக்கொண்டிருப்பார். அங்குள்ள சிவலிங்கம் எகிப்து நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டதாகக் கூறுவார்.

''ஒரு காலத்தில் இலிங்க வழிபாடு உலகம் முழுவதும் பரவி இருந்தது'' என்பதற்கு இத்தகைய இலிங்கங்களை எல்லாம் சான்றாகக் கூறுவார் இவர்.

பேராசிரியர் ழூவோ துப்ராய் புதுவையில் பணியாற்றியபோது, அவர் முயற்சியால் சேர்க்கப்பட்ட தென்னிந்திய கலைப் பொருட்களைக்கொண்டே, பிரஞ்சு நாட்டில் ''முசே தெ குய்மே'' என்னும் காட்சிக் கூடம் உருவான வரலாற்றை இவர் உருக்கமாகக் கூறுவார்.

'ஆனந்த குமாரசாமி அவர்களின் அருங் கலைக் கருவூலங்களையும், அவர்தம் ஆழ்ந்த அறிவாற்றலையும் இந்திய நாடு பயன்படுத்திக்கொள்ளத் தவறியதே!' என்று ஏக்கம் கொள்வார்.

இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறைப் பேரறிஞர்களில் பெரும்பாலோர் இவருடன் தொடர்பு கொண்டிருந்தனர். இவரைத் தெரியாதார் இத்துறையில் இலர்.

இந்திய இயல்பற்றி ஆராய்ச்சி செய்யவரும் வெளிநாட்டவர்கள், புதுவைக்கு வந்தால், இவரிடம் வந்து செய்திகளைக் கேட்டறியாமல் போனதில்லை. இத்

துறையில் இவரின் நண்பர்களில் பெரும்பாலார் வெளி நாட்டவர்களே.

கலைத் திறனாளர்

கலைப் பொருட்களின் காலத்தைக் கணித்துக் கூறுவதில் இவருக்கு நிகர் இவரே. பன்னூட்டுக் கலைப் பொருட்களை ஒன்ருகச் சேர்த்து அடையாளம் காட்டச் சொன்னுல், நாட்டுவாரியாக, காலவாரியாகப் பிரித்துக் காட்டுவார்.

கை கால்கள் உடைந்துபோன அல்லது தலையற்ற சிற்பமாக இருந்தாலும் மேலுள்ள அணிகலன்களையும், அடையாளங்களையும் கொண்டே அச்சிற்பத்தின் பெயரைக் கூறுவார். இத்துறையில் இவருக்கு மிக ஆழமான பட்டறிவு உண்டு.

வட, தென்னிந்தியாவில் வாழ்ந்த அரசர்களது காலங்களை அவர்களின் மரபுவழிப் பட்டியலோடு சொல்லும் திறம் இனி யாருக்கு வரும்?

முஸ்லிம்களின் ஆட்சிக் காலத்தில், அவர்கள் மேற்கொண்ட நிர்வாக முறையை இவர் பெரிதும் புகழ்ந்து பேசுவார்.

ஆங்கிலேயர்கள் சிறு மாற்றங்களுடன் அதனை அப்படியே ஏற்றுக் கொண்டமைக்கான காரணத்தையும் புலப்படுத்துவார்.

வரலாறு, அகழ்வாராய்ச்சி, கல்வெட்டு, செப்பேடு, செப்புத் திருமேனிகள், சிற்பங்கள், கோயில்கள், சாத்திரங்கள், பூசைக் கிரமங்கள் இவைபற்றி எல்லாம் இவரிடம்தான் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

அறிவியல் நோக்கு அணுகுமுறையை இவர் இத் துறையில் இணைத்துக் காட்டுவார்.

பெருங்கோயில்களுக்கு அக்காலத்து அரசர்களும் கொடையாளர்களும் வழங்கிய அணிகலன்களின் அழகைக் காண்பதில் இவர் பெருவிருப்பம் கொண் டிருந்தார்.

நான் பெற்ற பேறு

தில்லை நடராசப் பெருமான் திருக்கோயிலுக்குத் திப்புசுல தான், பச்சையப்ப முதலியார், பிற்காலப் பாண்டியர் ஆகியோர் வழங்கிய மதிப்புமிக்க அழகிய அணிகலன்களை எல்லாம் இவரோடு கண்டு களிக்கும் வாய்ப்பு சென்ற ஆண்டு எனக்குக் கிட்டியது. அணி கலன்களின் பெயர்களையும் அவற்றின் வரலாறு களையும் அங்கேயே எனக்கு விளக்கிக் கூறினர். அவற்றின் நுட்பமான வேலைப்பாடுகளை உணரச் செய்தார்.

மதுரை மீனுட்சியம்மைத் திருக்கோயில், கள்ளழகர் திருக்கோயில்களை அவரோடு சென்று காணும் வாய்ப் புப் பெற்றவன் யான். இன்னொரு முறை கோனேரி ராஜ புரம் அழைத்துச் சென்று, உலகப் புகழ்பெற்ற செப்புத் திருமேனிகளின் அழகிலே கலக்கச் செய்தார். அவ ருடன் நீண்ட பயணங்களை அடிக்கடி நான் மேற் கொண்டதுண்டு. அப்பயணங்களே இத்துறையில் என்னைப் பெரிதும் ஈடுபடுத்தியது. அவருடைய அணுகுமுறை, செய்திகளைச் சொல்லும் பாங்கு என் னுள பசுமை நினைவாக நிலைத்துவிட்டன. அவை என் றென்றும் மாருதவை.

இலக்கிய மன்றம்

1943ஆம் ஆண்டில் புதுவைப் பெருநகரில் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனார் அவர்களால் இலக்கிய மன்றம் தொடங்கப்பெற்றது. அதன் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் கவிஞர் பெருமானுக்கு இவர் பெரிதும் துணை நின்றார்.

கவிஞர்க்குப் பின் செயலற்றுப்போன இம் மன்றத்தை 1978 முதல் மீண்டும் இவர் செயல்படுத்தினார். இம்மன்றத்தின் சார்பாகத் திருவையாறு அரசர் கல்லூரி முதல்வர் திருமிகு. தி. வே. கோபாலய்யர் அவர்களைக் கொண்டு தொடர் சொற்பொழிவுகள் நிகழுமாறு செய்தார்.

தமிழ்ப்பண் ஆராய்ச்சி வித்தகர், இசைப் பேராசிரியர், குடந்தை ப. சுந்தரேசனார் அவர்களைக் கொண்டு இம் மன்றத்தின் சார்பில் சிலப்பதிகார வகுப்பு நடைபெறச் செய்தார். இத்தொடர் வகுப்பு தொடர்ந்து நடைபெறுவதற்குப் புரட்சிக்கவிஞர்தம் திருமகனார் மன்னர்மன்னன் அவர்கள் பெரிதும் உதவியாக இருந்தார். இது இன்னமும் நடந்து கொண்டிருக்கிறது.

இத்தகைய நிகழ்ச்சிகள் யாவும் தம் இல்லத்திலுள்ள கலைக்கூடத்திலேயே நடைபெறுவதற்கு அனைத்து உதவிகளையும் செய்த செட்டியார் அவர்களைப் புதுவைப் பெருநகரம் என்றும் மறந்திட இயலாது.

பாரதி பாலர் பள்ளி

தேசியக் கவிஞர் மகாகவி பாரதியார் புதுவையில் தங்கி நாட்டு விடுதலைக்குத் தொண்டாற்றி வந்தமை

யைப் போற்றும்வண்ணம், புதுச்சேரியில் பாரதி மன்றம் ஒன்று செயல்பட்டு வந்தது. அம் மன்றத்தின் வளர்ச்சியில் பெருமளவு நாட்டங் கொண்டிருந்த செட்டியார் அவர்கள், புதுவை அரசின் ஒப்புதலைப் பெற்றுக் கட்டடம் கட்டி, அரசே ஏற்று நடத்திட வகை செய்தார்; பாரதி பாலர் பள்ளியாக மாற்றி என்றும் நிலைத்திருக்க வழி தேடினர்.

புதுவைத் தமிழ்ச் சங்கத்தின் செயல்பாட்டில், வளர்ச்சியில் பெரிதும் நாட்டங்கொண்ட இப்பெருந் தகையார், இச்சங்கத்தின் தலைவராகவும் விளங்கினர். இச்சங்கத்துக்குத் தனியாக ஒரு கட்டடம் இருக்க வேண்டுமென்று இவர் விருப்பம் கொண்டார். நிலம் வாங்கப்பட்டது. கட்டடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழாவும் அண்மையில் நிறைவேறியது.

பல மன்றங்களில்

கல்விக் கழகம்
இலக்கியக் கூடல்
தனித் தமிழ்க் கழகம்
தமிழ் காப்புக்குழு
சுப்ரதீபக் கவிராயர் தீந்தமிழ் மன்றம்

முதலான பற்பல இலக்கிய அமைப்புகளில் நமது திருமுடிச் செம்மல் பங்கு பெற்றிருந்தார். இவ்வமைப்புகளின் பெரும்பாலான கூட்டங்கள் தமது இல்லத்துக் கலைக் கூடத்திலேயே நடைபெறுவதற்கு இசைவும் உதவியும் வழங்கினர்.

பல்வேறு இலக்கிய அமைப்புகளின் வழியாக எண்ணற்ற இதழ்கள், மலர்கள் வெளிவருதற்கும் இவரே காரணமாக இருந்தார்.

புதுவை வேதபுரீசுவரர் திருக்கோயில் நூலகத்திற்குத் தம்மிடமிருந்த கிடைத்தற்கரிய—மதிப்புமிக்க—எண்ணற்ற நூல்களை இவர் வாரி வழங்கினார்.

மருத்துவக் கழகம்

இவர் மருத்துவத் துறையிலும் தேர்ந்து விளங்கினார். சித்த மருத்துவர்களும், ஆயுர்வேத மருத்துவர்களும் ஓமியோபதி மருத்துவர்களும் இவரை எப்பொழுதும் சூழ்ந்துகொண்டிருப்பார்கள்.

புதுவை மாநில சித்த வைத்தியர்கள் தொழிலியல் கூட்டுறவுச் சங்கம், 15-6-1975இல் தொடங்கப் பெற்றபட்டது. அன்று முதல் இவரே அதன் தலைவராக விளங்கினார்.

திருக்குலத்துக் காவலர்

புதுவை மாநில நிலமற்ற விவசாயிகள் கூட்டுறவு சங்கத்துக்கும் இவரே தலைவர். புதுவை மாநிலத் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்துக்குத் தலைவராகவும் இருந்து அதனை வழி நடத்திச் சென்றார்.

தீண்டாமை ஒழிப்புக்கு இராமாநுஜர் பெரிதும் பாடுபட்டு வந்ததை, அவர் ஆற்றிய அருந்தொண்டினைச் சான்றுகளோடு மனம்விட்டுக் கூறுவார். இத்துறையில் உணர்ச்சி வயப்பட்டுப் பேசும் போது, அது வரலாறாகவே மிளிரும்.

தீண்டாதவர்களை 'திருக்குலத்தார்' என்று கொண்டாடிய வைணவர்களைப் பெரிதும் போற்றுவார். இராமாநுஜரைப் பற்றி அவர் சொல்லாத நாளே இல்லை புதுவை மாநிலத்தின் சில பகுதிகளில் தாமே தலைமை

ஏற்று, தீண்டாதவர்களோடு ஆலயப் பிரவேசம் நடத்தினார். அவர்களோடு தாமும் அமர்ந்து உணவு உண்டார்.

அவர்களின் குறைகளை அமைதியோடு கேட்டறிந்தார். குறை களைந்திட தம்மாலான முயற்சிகளைச் செய்தார். அரசியல் மட்டத்திலும் அரசாங்க மட்டத்திலும் இதற்கான ஒத்துழைப்பைப் பெற்றார். இவை எல்லாம் அவர்தம் உள்ளத்தின் அடித்தளத்தில் மறைந்து கிடந்த புரட்சித் தீயின் வெளிப்பாடுகளாகும்.

சட்ட அடிப்படையில் எவ்வளவுதான் செய்தாலும் தீண்டாமை எண்ணம் மக்களின் அடி மனத்திலிருந்து முற்றிலும் மறைய வேண்டுமே என்று கவலை கொள்வார் இவர்.

அனைத்துக்கும் மேலாகத் 'திருக்குலத்தார் உள்ளத்தினின்றும் தாழ்வு மனப்பான்மை ஒழிய வேண்டுமே' என்று மனம் வருந்துவார்; அதற்கும் மேலாக, சமுதாயத்தோடு அவர்கள் வேற்றுமை இன்றி ஒன்றுபட்டு வாழவேண்டுமானால் அவர்கள் கல்வியில், திறமையில், தகுதியில், பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய வேண்டுமே என்று அங்கலாய்ப்பார்.

சட்டத்தின் துணை கொண்டு இவர்களுக்கு எத்தனை காலம் சலுகை தேடித்தர முடியும் என்று வெதும்புவார். சமுதாயத்தில் இவர்களின் நிலைகண்டு வேதனையடைவார்! இவர்களின் முன்னேற்றம் பற்றியே கவலை கொள்ளும் இவர் இம்மாநிலத்துத் திருக்குலத்தார்க்குத் தூணாக — பற்றுக்கோடாக விளங்கினார்.

தலைமைப் பதவியை நாடி இவர் ஓடுவதில்லை. தேடி ஓடிவரும் அப்பதவியை உதறித் தள்ளுவார். ஆயினும் வேறு வழியில்லை; அது இவரையே பற்றிக்கொள்ளும், காரணம் — செயலாக்கம், நேர்மை, உழைப்பு, பொறுப்பு ஆகியவையே. புதுவைப் பகுதியில் எத்தகைய தலைமைப் பதவியும் இவர் ஒருவரைப் பற்றியதாலேயே பெருமை அடைந்தது; பயன் பெற்றது.

அரசியல் ஆர்வலர்

ஓர் ஆடு சிக்கினுல் ராஜதந்திரிகள் அதன் உரோமத்தை மட்டும் கத்தரித்துக்கொள்வர். ஆனுல் அரசியல்வாதிகள் அதன் தோலையே உரித்துவிடுவார்கள்.

—ஜேம்ஸ் பிஸேன்

பெருந்தலைவர் காமராசர்

நாட்டுப்பற்று, நேர்மை, நாணயம், தவறுகளை அஞ்சாமல் சுட்டிக் காட்டும் துணிவு — இவற்றின் காரணமாகவே பெருந்தலைவர் காமராசரை இவர் தம் தலைவராக ஏற்றுக்கொண்டார். ஒருவர்பால் ஒருவர் உண்மையான—உள்ளார்ந்த அன்பு கொண்டிருந் தனர். அரசியல் துறையில் — களத்தில் இருபெரும் மேதைகளின் பண்புகளும் ஒன்றே. எனவேதான், இருவரிடமும் அன்பு வாழ்ந்தது — தழைத்தது.

"அன்பை வாங்கவும் முடியாது, விற்கவும் முடியாது. அன்பிற்கு விலை அன்புதான்."

அன்புத் தலைவர் காமராசரை இவர் பெரியவர் என்றுதான் பெரும்பாலும் அழைப்பார். பெரியவருக் கும் தமக்கும் உள்ள அன்பை, நம்பிக்கையை இவர் எப்போதும் சொல்லுவதே இல்லை. அரசியல் சுழற்சி யில் மீண்டும் தாம் சிக்க நேர்ந்துவிடும் என்று இதனைச் சொல்வதில்லை.

பெரியவர் வாழ்ந்த காலத்தில் செட்டியார் வீட்டுத் தொலைபேசி மணி அழைப்பு விடுக்கும். பெரியவரும் இவரும் வெகு நேரம் பேசிக்கொண்டிருப்பார்கள் எனக்கு மட்டும் அங்கே இருக்க அனுமதி உண்டு. உள்ளூர்த் (புதுவை) தலைவர்களின் பெயர்கள் எல்லாம் பேச்சின் ஊடே வந்துசெல்லும். ஒரு வழியாகப் பேச்சு முடிவடையும். பின்னர்,

உள்ளூர் அரசியல் தலைவர்கள் வருவார்கள். நீண்ட நேரம் பேசிக்கொண்டிருப்பார்கள். எல்லாம் அறிந்த இவர், ஏதும் அறியாதவர் போல் கேட்டுக் கொண்டிருப்பார்.

இவர்கள் சொல்லும் அரசியல் செய்திகள் யாவும் பெரியவரோடு ஏற்கனவே பேசப்பட்டவையாக—முடிவெடுக்கப்பட்டவையாக இருக்கும். ஆனாலும், பேசிக் கொண்டே இருப்பார். காட்டிக்கொள்ள மாட்டார். என்னை ஓரக்கண்களால் பார்ப்பார். அது அவர் அடிமனம் சிரிப்பதற்கு அடையாளம். இப்பண்பு பெரியவருக்கும் உண்டு. இரண்டு வரலாறுகள் ஒன்றை ஒன்று சந்திக்காமலே அடிக்கடி உரையாடிக் கொண்டிருக்கும். என்னைப் பொறுத்த மட்டில் இது வியப்பல்ல. மிகச் சாதாரண நிகழ்ச்சி.

மோதும் அணிகள்

1954 ஆம் ஆண்டு புதுவை மாநிலம் பிரஞ்சுக்காரர்களின் ஆட்சியினின்றும் விடுதலை பெற்றது. அடுத்த ஆண்டு புதுவை நகராட்சித் தேர்தலில்,

1. திரு. குபேர் தலைமையிலான காங்கிரஸ்

2. கம்யூனிஸ்ட் கட்சியோடு இணைந்த மக்கள் முன்னணி

3. திரு செல்லான் தலைமையிலான பிரிவு

முதலான முப்பெரும் அணிகள் போட்டி இட்டன. மக்கள் முன்னணி எனப்பெறும் முற்போக்குக் கூட்டணி பெருவாரியாக வெற்றி பெற்றுப் புதுவை நகராட்சியைக் கைப்பற்றியது.

நகரத் தந்தை

அரசியல் துறையில் இவருக்கு அருமை நண்பராகவும் நம்பிக்கைக்கு உரியவராகவும், உண்மை அன்பராகவும் விளங்கியவர் முத்தியால் பேட்டை திரு. ப. சண்முக முதலியார் அவர்களே. இவர் மக்கள் முன்னணி வேட்பாளராய் வெற்றி பெற்றவர். செட்டியார் அவர்கள் சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். பெருவாரியாக வெற்றி பெற்ற மக்கள் முன்னணி, செட்டியார் அவர்களையே துணை மேயராகத் தேர்த்தெடுத்தது.

செட்டியார் அவர்களின் ஆலோசனை, அறிவு புதுவைநகர் வளர்ச்சிக்கு இன்றியமையாதவை என்பதை உணர்ந்து, அந்த அவை அவரைத் துணை மேயராக ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தது.

அரசியல் தொடர்பே இல்லாமல் சுயேச்சையாக அவைக்கு வந்த ஒருவருக்கு, துணை நகரத் தந்தை பதவி நாடிவந்தது. இதற்குக் காரணம் அன்னாரின் நேர்மை, அறிவு, ஆற்றல் ஆகியவையே.

அரசியல் தலைவர்களிடம் இவர் நீக்குப் போக்குடன் நடந்துகொள்ளும் ஆற்றல் பெற்றவர். மக்கள் முன்னணியின் வேட்பாளராகப் பாவேந்தர் பாரதிதாசனும் வெற்றி பெற்றிருந்தார்.

கம்யூனிஸ்ட் தலைமைக்கும் கவிஞருக்கும் சிறு கருத்து வேறுபாடு வளர்ந்தது. இதன் விளைவாக அவையில் பாவேந்தர் சுயேச்சையார்க்குரிய இடத்தில் அமர்ந்தார். அவரோடு நம் செட்டியாரும் அமர்ந்திருந்தார். இவ்விருபெரும் அறிவாளிகளும் ஒருவருக்கு ஒருவர் துணையாயினர். இக் காட்சியைக் கண்டவர்கள பேறு பெற்றவர்களே!

எச். எம். காசிம் என்கிற பண்பாளர் செட்டியார் அவர்களின் நெருக்கமான நண்பர். செட்டியாரிடம் அளவற்ற அன்பு கொண்டவர். இன்ப துன்பங்களில் பங்கு கொண்டவர். அவர் மேயராக இருந்த போது, இவர் துணை மேயர் ஆனார். துணை மேயருக்குத் துணையாக திருமிகு ப. சண்முக முதலியார் தோள்கொடுத்தார். இவ்விருவரின் முயற்சியால் முத்தியால்பேட்டை பகுதி மிகப்பெரிய அளவுக்கு வளர்ச்சி பெற்றது.

முழங்கால் அளவுக்குப் புழுதி படிந்திருந்த பாதைகள் அனைத்தும் தார் பாதைகளாக மாற்றம் அடைந்தன. மின்வசதி, குடிநீர் வசதி இப்படி முத்தியால் பேட்டைப் பெற்ற வசதிகளை அடுக்கிக் கொண்டே போகலாம். எப்பகுதியைக் காட்டிலும் இப்பகுதிக்கு இவர் ஆற்றிய தொண்டு மிகப் பெரிது. பெருந்தலைவர் காமராசரின் ஆசானாகிய சத்திய மூர்த்தி அவர்களோடு ஒப்பிட்டுப் பேசும் அளவுக்கு இவர் நிர்வாகத் திறமை பெற்றிருந்தார்.

சட்டப்பேரவைப் பணி

நமது திருமுடியார் காங்கிரஸ் கட்சியின் சார்பில் 'ராஜ்பவன்' தொகுதியில் போட்டியிட்டு புதுவைச்

சட்டப் பேரவையின் உறுப்பினர் ஆனார். 1958 முதல் 1960 வரை பேரவையில் இவர்தம் பணி குறிப்பிடத் தக்க சிறப்பிடம் பெற்றது—பயன்மிக்க சட்டங்கள் புதிதாகக் கொணர இவர் காரணமாக இருந்தார்.

காங்கிரஸ் தலைவர்

சட்டப்பேரவை உறுப்பினர் ஆனபின்னர், இவரையே புதுவை மாநிலக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக்க வேண்டுமென்று, புதுவை அரசியல் பிரமுகர் திரு. E. குபேர் அவர்கள் விரும்பினார்கள்.

தமக்குப் பின்னர் கட்சியைக் கட்டிக்காப்பவர் இவரே என்று அவர் மனம்விட்டுக் கூறும் அளவுக்கு, அவரின் நம்பிக்கையை இவர் பெற்றிருந்தார் அவர் விருப்பம் நிறைவேறியது.

நமது செட்டியார் அவர்கள் புதுவை மாநிலக் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பேற்றுத் திறம்படக் கட்சியைக் கட்டிக் காத்தார். இவர் காலத்தில் இக்கட்சி பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற்ற கட்சியாகத் திகழ்ந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்

1967—இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில், தலைவர் காமராசரின் விருப்பத்திற்கிணங்க, செட்டியார் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராகப் புதுவை மாநிலத்தில் போட்டியிட்டார்; வெற்றி பெற்றார். 1971—வரைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார்.

இவர் டெல்லியில் தங்கியிருந்த காலத்திலும் தாம் கண்ட அறிஞர்களின் வரலாறு, அங்குள்ள கட்டடங்

களின் அமைப்புமுறை, மக்களின் பழக்கவழக்கங்கள், முதலானவற்றையெல்லாம் அறிந்து தெரிந்துவந்து கூறுவார். தில்லி தமிழ்ச் சங்கத்தோடு தொடர்பு கொண்டிருந்தார்.

நாடாளுமன்றத் தேர்தலில் இவர் வெற்றி பெற்றமையைப் பாராட்டும் வண்ணம், காஞ்சிபுரம் P. B. அண்ணங்கராசாரிய சுவாமிகள், 1967 இல் "திவ்ய ப்ரபந்த பகவத் கதாம்ருதம்" என்னும் பெயரில் அருமையான நூல் ஒன்றைத் தமது செலவில் வெளியிட்டு, வெற்றிவிழாக் கொண்டாடினுர். எனவே, நல்லவர்கள்—அழுக்காறற்ற அறிஞர்கள் இவர் முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்ந்தார்கள். வாழ்த்திஞர்கள்.

இந்திய சோவியத் நட்புறவுக் கழகத்தின் புதுவை மாநில உறுப்பினராக — உலக அமைதிக் குழுவில் இடம் பெற்று சோவியத்து நாட்டுக்குப் பயனுள்ள பயணத்தை மேற்கொண்டார். ஏற்கெனவே ஐரோப்பாவுக்கு இவர் பலமுறை சென்றவர். என்ருலும், இவர் உள்ளத்தைக் கவர்ந்த நாடு சோவியத் நாடுதான்.

அந்நாட்டு நிர்வாக அமைப்பு முறையை இவர் பெரிதும் போற்றுவார். நம் நாட்டு நிர்வாக அமைப்பு முறைகளை முழுமையாகவே களைந்தெறிய வேண்டுமென்பார்.


புதுவை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. வ. சுப்பையா அவர்கள் இவருடைய குடும்ப நண்பர். இல்லை, குடும்பத்தில் ஒருவர். நம் செட்டியார் அவர்களை எல்லாரும் 'அண்ணே! அண்ணே!' என்றுதான்

அன்போடு அழைப்பார்கள். ஓரிருவர் மட்டுமே 'தம்பி!' என்று உரிமையோடு அழைப்பார்கள். அவர்களில் ஒருவர் திரு. வ. சுப்பையா அவர்கள்.

இருவருக்கும் அரசியல் கருத்து வேறுபாடுகள் மிகுதியும் உண்டு. இருப்பினும், குடும்பப் பாசத்தில் நட்புணர்வில் அவற்றைக் கலக்க விடுவதில்லை. நாணயமான அரசியலுக்கு, உயர்ந்த அரசியல் பாரம் பரியத்துக்குத் தேவையான பண்பு நலன்களை இவ்விரு வருமே பெற்றிருந்தனர்.

நாணயமற்ற அரசியலில் இவர் சிக்கிக்கொள்ள விரும்பவில்லை. நேர்மையின்மையும் சுயநலமும் அரசியல்வாதிகளைப் பற்றியபோது, தீவிர அரசியல் அரங்கிலிருந்து தாமாகவே விலகிக் கொண்டார்.

இவர் ஆட்டின் உரோமத்தைக் கத்தரிக்காத இராஜதந்திரியாகத் திகழ்ந்தார்; ஆட்டின் தோலையே உரிக்கும் அரசியல்வாதியாக மாறுவதற்கு இவர் மனம் இடந்தரவில்லை.



தமிழ்நாட்டுடன் புதுவையை இணைக்கும் முயற்சிகளை எதிர்த்து ஆவேசமாகத் தமது கருத்துகளை வெளியிடுகின்றார் திருமுடியார் (சட்டை இல்லாமல் இருப்பவர்). உடன் இருப்பவர்கள் டாக்டர் என். ரங்கநாதன் (சி. பி. ஐ.), எம் குபேர் முன்னாள் மேயர் ஒருவரின் மகன். இடம்: திருமுடியாரின் இல்லம்.

—படம் : இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி
மே 13–19, 1979, பக். 21.

வருவிருந்து பார்த்திருப்பார்

மணிக்கணக்கில் போதனை செய்வதிலும்,
ஒரு கணப்பொழுது உதவுதல் நலம்.''

—சீனப்பழமொழி

பிறருக்கு உதவி செய்வதன் மூலம் நீங்கள்
உங்கள் சுமையைக் குறைத்து கொள்ளலாம்.

—பிரான்ஸ் கோயஸ்

விருந்துக் கூடம்

அடையா நெடுங்கதவம் அண்ணலின் இல்லத்தை அலங்கரிக்கும். பசித்தவரும் வருவார்கள்; பசி இல்லை என வருந்துபவரும் வருவார்கள்.

கடையேழு வள்ளல்களுக்குப் பிறகு ஒரு குமண வள்ளல் இருந்தாராம். புதுவைவாழ் இக்குமண வள்ளல், கூடத்தில் அமர்ந்திருப்பார்; ஒரு பக்கம் புலவர் கூட்டம், மறுபக்கம் அறிஞர் கூட்டம், இன்னொரு பக்கம் பசித்தவர்க்கூட்டம், வேறொருபக்கம் அரசியலை அலசுவோர்க் கூட்டம்—இன்னும் எத்தனை எத்தனையோ கூட்டங்கள்—அவர்களுக்கு இடையிலே நம் குமணவள்ளல்!

விவாத அரங்கம்

எண்ணற்ற கருத்துரைகள், கருத்து வேறுபாடுகள்— இவ்வளவும் இடம்பெறும். அவர் சொல்வதற்

கெல்லாம் ஆமாம் போடுவோர் அனேகம்பேர்; மறுத்துரைப்பார் வெகுசிலரே.

இவர் கருத்து வேறுபாடுகளை வரவேற்பவர். மறுப்புரையாளரை மனமாரப் பாராட்டுவார்; இவர்களையே எனக்குப் பிடிக்கும் என்பார்.

இது ஒரு பலசரக்குக் கடை. இங்கு இல்லாத பொருளே இல்லை. எல்லாம் கிடைக்கும். கலப்பின்றித் தரமான பொருள்களே இங்கு விலைபோகும்.

ஒவ்வொன்றுக்கும் இங்கு ஒரு சொற்பொழிவே நிகழும். துறை வேறுபட்டவர்களும் இதனால் ஈர்க்கப் பெறுவார்கள். புதிய செய்திகளை அறிவார்கள். சில அரைகுறை வேக்காடுகள் இங்கே அகப்பட்டு விழிப்பதும் உண்டு. பிழைக்கத் தெரிந்தவர்கள் பேசாமல் இருப்போரே! வெடுக்கென்று பதில் சொல்பவனுக்கு அறிவுமட்டம் என்பார்கள். பேசாமல் இருந்து செய்திகளைத் தெரிந்துகொள்ளப் பழக வேண்டும் என்பது ஐயா அவர்களின் பொன்மொழி.

இலக்கியத்தில், வரலாற்றில், அரசியலில் எதிலேனும் சிக்கலான வினாக்களை அவ்வப்போது கேட்டுக் கொண்டே இருப்பார். சிலபேர் நழுவுவார்கள்; வேறு சிலர் தெரியாது என்று சொல்வதற்குத் தம்மைத் தயார் செய்துகொள்வார்கள். வெடுக்கென்று சொல்லி அறியாமையைக் காட்டிக் கொள்வாரும் உண்டு. அவரே விடை சொல்வார்; அழகாக அற்புதமாகச் சொல்வார்.

உதவும் பாங்கு

நாள்தோறும் உதவி பெற்றுச் செல்வோர் இங்கு ஏராளம். அவ்உதவி பணமாக இருக்கும்; அறிவாக

இருக்கும்; அரசாங்க வேலையாக இருக்கும்; பதவி யாக, பதவி உயர்வாக—இன்னும் என்னென்ன உருவிலோ இருக்கும். இவற்றையெல்லாம் அவரே அறிவார்; அடுத்து ஆண்டவனே அறிவான்.

நேருவைப்போல், காமராசரைப்போல் இவர்க்கும் தாள்தோய் தடக்கைகள். ஓயாது ஒழியாது கொடுத் தமையால் இவர் கைகள் நீண்டனவோ?

தன்னிடம் தயாரானவர் தன்னினும் உயர்ந்து நிற்கவேண்டும் என்று விரும்புவார். அதுவே தனக் குப் பெருமை என்பார்.

ஆர்வலர்

கல்வெட்டுத்துறை அவருக்குக் கைவந்த கலை. அறிஞர் தி.நா. சுப்பிரமணியனார் முதல் அனைவரோடும் இவருக்குப் பழக்கம் உண்டு. நீலகண்ட சாஸ்திரி யாரை இவர் நினைந்து நினைந்து போற்றுவதுண்டு.

கருத்தைப் பரப்புதல்

அவர் எழுதி நான் பார்த்ததில்லை. ஆனால், எழுது வோர்க்கு வேண்டுவன எல்லாம் செய்தளிப்பார். தமது கருத்துகளை வாரி வழங்கிடுவார். அவருடைய கருத்துரைகள், எண்ணங்கள் அனைத்தும் ஆயிரக் கணக்கானோர் பெயர்களிலே வெளிவந்துள்ளன. எப் படியாவது செய்திகள் வெளிவரவேண்டும் என்பதே அவர் ஆவல்.

வல்லவராக

சிலரைப் பேச்சுக்கு மட்டுமே வைத்துக் கொள் வார். இன்னும் சிலரைச் செயலுக்கு மட்டுமே பயன்

படுத்துவார். பேசுவாரைவிட செயல்படுவாரையே இவருக்கு மிகவும் பிடிக்கும்.

ஆதரவாளர்

இவருக்கு யாரும் பகைவர் இல்லை. இவர் யாரையும் பகைவராகக் கருதுவதில்லை. இன்னார் இனியர் என்னாது எல்லார்க்கும் உதவுவார். குறிப்பறிந்து ஏவல்செய்யும் குணக்குன்று குடும்பச் சிக்கல்கள், சொத்துத் தகராறுகள்—இவற்றில் சிக்கி அல்லல் பட்டு ஆற்றாது ஓடிவருவார்க்கு ஆதரவு கொடுத்து, ஆவன செய்து, நீதி வழங்கி நிலை நிற்கச் செய்திடுவார்.

விருந்தோம்பும் பண்பு

பசித்தவர்க்கும் பாமரர்க்கும், நண்பர்க்கும் விருந்தளித்து மகிழ்ச்சியடைவார். அவர்களோடு தாமும் அமர்ந்து உண்பார். ஒருவர் விரும்பி உண்ணும் உணவுப் பொருள், குறையாமல் பார்த்துக் கொள்வார். இலைபோடுவது, தண்ணீர் வைப்பது-இவற்றில் கூட மிகக் கவனமாக இருப்பார். யாருக்கு எது தேவை; எவ்வளவு தேவை என்பதையும் அறிந்திருப்பார். உணவு படைப்பதில் உடல் நலம் பேணுதல் கலந்திருக்கும்.

"உனக்கு இன்னது ஆகாது நிறுத்திவிடு, இன்னது நல்லது வைத்துக் கொள்"!—என்று அன்போடு கட்டளை இடுவார். இன்ன உணவு உடம்புக்கு ஒத்துக்கொள்ளும், இன்னது ஆகாது என்றெல்லாம் ஆராய்ச்சி செய்யாதே என்ற பொருளில் ஐயம்விட்டு உண் என்பார்.

புதிதாக வருவார்க்குப் போலி கௌரவம் குறுக்கே நிற்கும். "போதும் என்னும் அளவுக்கு உண்ணாதே; வேண்டும் என்னும் அளவுக்கு உண்!"—என்பதைப் "போதுங்கிற அளவுக்குச் சாப்பிடாதே, வேணுங்கிற அளவுக்குச் சாப்பிடு"—என்று நாகரிகமாகச் சொல்வார். உண்டு முடிந்ததும் ஒவ்வொருவருக்கும் வாழைப் பழம் கொடுப்பார்

ஒருவர் உண்ணும்போதே அவர் எப்படிப்பட்டவர் என்பதைக் கண்டு பிடிப்பார். பேச்சு, தோற்றம் இவற்றைக் கொண்டு அவர் இன்ன சமயத்தார் என்பார்.

செல்விருந்தோம்பி, வருவிருந்து பார்த்திருக்கும் நம் செட்டியார், இன்று வானத்தவர்க்கு நல்விருந்து ஆயினர்.

இரவுப் பறவைகள்

இரவுக் காலத்தில்கூட இல்லத்தின் திருக் கதவம் தாளிடப் பெறுவதில்லை. பழுமரம் நாடிச் செல்லும் பறவைகள் போல, இங்கே இப்பறவைகள் இரவு நேரத்தில் வருவதுண்டு. ஏதாவது ஒரு பொருள் பற்றிப் பேச்சுத் தொடங்கும். அது பயனுள்ளதாக—சுவையுள்ளதாக அமைந்துவிட்டால், அது முடிவடைய நெடுநேரம்—நெடுநேரம் இல்லை, விடிந்தே போகும்.! இரவுப் பறவைகள் புதிய உணர்வோடு, உணவோடு தமது கூடுகளை நாடிச் செல்லும்.

இதுவே பயனற்ற பொருள்பற்றி, தனிமனிதர்களைப் பற்றிய மதிப்பீடாக பேச்சு திசை மாறினால், செட்டியார் அவர்கள் விரைவில் உறக்கங்கொள்வார். பறவைகள் மட்டும் தமக்குள் பேசிக் கொண்டிருக்கும்; ஒவ்வொன்றாகச் சோம்பி வெளியேறும்.

கேட்டலும் வினவும்

புதியவராகச் சிலர் வருவர். அவரும் ஒரு துறையில் வல்லுநராக இருந்துவிட்டால், இரவு பகலாக மாறும். உள்ளத்தில் எழுச்சி பிறக்கும். வந்தவரின் சிந்தனையைக் கிளறிவிடுவார். அவர் சொல்ல இவர் கேட்டுக்கொண்டே இருப்பார். இடையிடையே ஓரிரு வினக்கள்தாம் இடம் பெறும். அவை புதியவரை விழிப்படையச் செய்யும்; சரடுவிடுவதை நிறுத்திக் கொள்வார். சொல்ல வேண்டுவதை மட்டுமே கோவைப்படுத்துவார். இத்தனையும் அவர் வினுக்களுக்குப் பிறகே நிகழும்.

உரிமையுடன் பழகுதல்

தன்னினும் வயது குறைந்தவரிடம் அல்லது வயது ஒத்தவரிடம் மிகுந்த அன்பு காட்டுவதற்கு அடையாளமாக அவர்களை 'வாடா! போடா!' என்றுதான் அழைப்பார். வழக்கமாக அப்படி அழைப்பவரை 'வாருங்கள்!' என்று மிகுந்த மரியாதையோடு அழைத்தாரானுல், அன்புக்குரியவர் ஏதோ தவறு செய்து அகப்பட்டுக் கொண்டார் என்பது பொருள். அன்போடு உரிமையோடு கடிந்து கொள்வார். தம்மை வாடா என்று அவர் அழைக்கவில்லையே என்று ஏங்கும் உள்ளங்கள் பல உண்டு. அவரோடு நெருக்கமாகப் பழகுவதற்கும் பயணம் செய்வதற்கும் தனித் தகுதியும் திறமையும் வேண்டும்.

இடமளித்தல்

அவர் இல்லத்து மாடியில் பெரிய பல அறைகள் உண்டு. வெளியூர் மாணவர்கள் இங்கே தங்கி கல்வி

கற்பார்கள். யாருக்கும் வாடகை இல்லை. ஏழை மாணவர்களுக்கு உணவு உண்டு. புத்தகம், உடைகள் உண்டு. இங்கே தங்கிப் படித்தவர்கள் உலகெங்கும் பரவி இருக்கிறார்கள். வாழ்க்கைத் தரத்திலும், பொருளாதார நிலையிலும் உயர்ந்து நிற்கிறார்கள். அவர்களில் பலர் இன்னமும் நன்றி மறக்கவில்லை.

அவர் மூளையின் ஒவ்வொரு 'செல்'லும், ஒப்பற்ற ஒரு தனி மூளை. ஒவ்வொன்றும் ஒருவரை ஏதோ ஒரு துறையில் இயக்கிக்கொண்டிருக்கும். அவர் புதிரானவர். புனிதமானவர்.

இசைத்திறலார்

இவர் இசைப்பிரியர், இசையிலும் வல்லவர். பற்பல இராகங்களை ஆலாபனை செய்வார். ஆரோகணம், அவரோகணம் செய்யும்போது அருமையாக இருக்கும். இவற்றையெல்லாம் அவர் நீண்ட பயணம் மேற்கொள்ளும்போது உடனிருந்து சுவைக்க வேண்டும். தன் இளைய மகன் திருமுடி அருணுக்கு மிருதங்கம் பயிற்றுவித்தார்.

இவர் சிறந்த இசைவல்லார் பாடல்களைத் தவறாது வானொலியில் கேட்பார். குறிப்பாகத் திருமதி எம். எஸ். சுப்புலட்சுமியின் பாடல்களை விரும்பிக் கேட்பார். இசை வேளாளர்க்கு ஆதரவு அளிப்பார். வேண்டியன செய்து, விரும்பியன கேட்டு மகிழ்வார்.

சிலப்பதிகார ஆய்வு

சிலப்பதிகாரத்தில் வரும் இசை நுணுக்கங்களைக் கேட்பதற்கென்றே குடந்தை திரு. ப. சுந்தரேசனாரைத் தம் இல்லத்தில் திங்கள் இருமுறை சிலப்பதிகாரத்

தொடர் வகுப்பு நடத்தச் செய்தார். இசையின் நுணுக்கங்களை முறையாக அவர் பாடும்போதெல்லாம் மெய் மறந்து விடுவார். ஆ! இத்தகைய இசை நிகழ்ச்சிகளை இனி நாங்கள் கேட்போமா?

திருவாசகம், சிலப்பதிகாரம், கம்ப ராமாயணம் ஆகியவற்றில் இவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு.

அறிஞர் கோபாலர்

எல்லாத் துறையிலும், இவர் வல்லவராயினும் இலக்கியத் துறையில் இவர்தம் உள்ளத்தைக் கவர்ந்தவர், கொள்ளை கொண்டவர் திருவையாறு கல்லூரி முதல்வர் திரு வே. கோபாலய்யர் அவர்களே!

அவரிடம் இவர் அளவிலாத பக்தி கொண்டிருந்தார். இல்லை! காதல் கொண்டிருந்தார்.

“ஐயா மட்டும் ஒரு பெண்ணாய்ப் பிறந்திருந்தால் அவரை என் மனைவியாக்கி, வாழ்நாள் முழுவதும் இலக்கிய இன்பத்தில் மூழ்கி இருப்பேன்!” என்று வாய் விட்டுக் கூறுமளவுக்கு அவர் இவர்தம் உள்ளத்தில் இடம் பெற்றிருந்தார்.

கோபாலய்யர் அவர்கள் இலக்கிய இன்பத்தில் தம்மை முழுமையாக மூழ்கடித்துக் கொண்டார். மற்றவரையும் அவ்வின்பத்தைச் செம்மையாக உணரச் செய்வதில் பேராற்றல் வாய்ந்தவர்.

இருபெரும் அறிவுலக மேதைகள் உரையாடத் தொடங்கினால், மற்றவர்களை மௌனிகளாக மாற்றி விடுவார்கள். “அறிவாளர்க்கு இடையில் அமைதியாக இருக்கும்போது முட்டாளும் அறிவாளன் ஆவான்” என்று திரு செட்டியார் அடிக்கடிச்சொல்லு

வார். என் போன்றோர் அந்நேரத்தில் மிக அமைதியாக இருப்போம், அறிவாளர் ஆகும் ஆர்வத்தில்!

இருவருக்குமிடையே சமஸ்கிருத ஸ்லோகங்களும் இடம் பெற்றுவிடும். கருத்தோட்டம்; கருத்து மோதல்; கலாரசனை உச்ச நிலையை அடையும்.

விந்தை நாடகம்

"அந்த மருங்கில் அமரர் கூறும் மந்திரம் கேட்கும் செவியே போல" நாங்கள் கேட்டுக்கொண்டிருப்போம். ஒன்றுமே தெரியாது, எல்லாம் தெரிந்து சுவைப்பதாக பாவனை செய்வோம். பாவனையால் செட்டியாரை ஏமாற்ற முடியுமா?

கடைக்கண்ணால் ஒரு பார்வை. அடுத்து ஒரு புன்சிரிப்பு. அடுத்த நிமிடம் எங்கள் முகத்தில் அசடு வழியும்.

கலைச் சுவை எளிதில் வந்துவிடுவதன்று. நீண்டகாலம் உழைத்துப் பெறவேண்டியது. இதற்கான உழைப்பு என்னிடம் உண்டா? என்று எண்ணிப் பார்க்கிறேன். மனிதப் பண்பை மதிக்கத் தெரிந்த மேதை இவர்.

இவர் யாரிடம் மிகுந்த அன்பு செலுத்துகின்றாரோ அவரைப் பலருக்கு முன்னால் வேண்டுமென்றேகிண்டல் செய்வார். 'அன்புடையவன் என்ன சொன்னாலும் நம்மை அவமானப்படுத்துவதாகாது" — என்பது மார்க்சிம் கார்க்கியின் பொன்மொழி

உண்மையை அறிவது ஞானம்; உண்மையை நம்புவது பக்தி; உண்மையாக நடப்பது மார்க்கம். இவற்றைச் செட்டியார் அவர்கள் இறுதிவரை நிறைவேற்றினார்.

ஆன்மிக நெறியில் அண்ணல்

சமய உணர்வில்லாத விஞ்ஞானம் ஒரு நொண்டி; விஞ்ஞானத் தெளிவில்லாத சமயம் ஒரு குருடு.

—ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

எது நாத்திகம்?

ஒன்றை மறுத்துச் சொல்லுவது நாத்திகம். உண்மையை மறுத்தாலும், பொய்யை மறுத்தாலும் நாத்திகமே. காலப்போக்கில் இது கடவுள் கொள்கையை மறுப்பது மட்டுமே நாத்திகம் என்று ஆனதாகச் செட்டியார் அவர்கள் அவ்வப்போது சுட்டிக் காட்டுவார்.

ஈசுவரவாதம், நிரீசுவரவாதம்—இவைபற்றி இவர் சொல்லும் விளக்கங்கள் அறிவியல் நோக்குடையவை.

வைதிகம், சமணம், பௌத்தம், ஆசீவகம், சைவம், வைணவம், இசுலாமியம், கிறித்துவம் முதலான மதங்கள் செல்வாக்கோடு விளங்கிய காலகட்டங்களை வரலாற்று நோக்கோடு கூறுவது மட்டுமல்ல, இவற்றின் தத்துவங்களை மிக விளக்கமாகப் பிற மதத் தத்துவங்களோடு ஒப்பிட்டுக் காட்டும் பாங்கு இவருக்கு மட்டுமே உரித்தானது.

ஒப்பீடு

குறிப்பாக வைதிக மதக் கருத்தை விளக்கும் போது வேதங்கள் இடம் பெறும். சமணம்பற்றிப்

பேசும்போது பிராகிருதம்போன்ற மொழிச்சொற்களைப் பயன்படுத்துவார். பௌத்தம்பற்றிப் பேசும்போது திரிபிடக நூலோடு ஒன்றிவிடுவார். ஆசீவகத்தை விளக்கும்போது, சமண பௌத்த மதங்களின் நடை முறைச் சொற்கள் இடம் பெறும். வைணவம்பற்றிச் சொல்லவே வேண்டாம். இசுலாமியம்பற்றி விளக்கும் போது அராபியும் உருதும் சரளமாக வரும். கிறித்து வத்துக்கு பைபிள் தமிழும் இலத்தீனும் கை கொடுக்கும்.

ஒவ்வொரு விளக்கத்துக்கும் 'வரலாற்றை மைய மாகக் கொள்வார். அனைத்துக்கும் மேலாக வேறுபட்ட பல தத்துவங்கள் தோன்றுவதற்கான சூழல், காரணம் முதலானவற்றைத் தெளிவாகக் கூற இனி யாரே வல்லார்?

முறையான நோக்கு

சைவப்பற்றுள்ளவர்; சமயஉணர்வுமிக்கவர்; சமயக் கொள்கைகளை அறிவியலோடு இணைத்துக் காண்பவர் நம்பவே தகுதியற்ற புராணங்களில்கூட நம்பிக்கை வைத்திருப்பார். தள்ள வேண்டியவைகளைத் தள்ளிக், கொள்ள வேண்டியவற்றுக்குக் காரணம் கூறுவார். அடிப்படைக் கருத்தை ஏற்றிடச் செய்வார்.

திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழாரடி களைத் தமிழ்நாட்டின் முதல் வரலாற்றாசிரியர் என்பது இவர்தம் ஆழ்ந்த நம்பிக்கை

நாள் வழிபாடு

நாள்தோறும் காலையிலும் மாலையிலும் வழிபாடு நடத்துவார். பூசைக்கிரமங்கள் முறையாக, முழுமையாகு

இருக்கும். முத்திரைகள் இடம் பெறும்; சிலமணிநேரங்கள் யோகத்திலும் செல்லும். எது தவறினாலும் இவை மட்டும் தவறுவதில்லை. வழிபாடு நடத்தி வெளிவரும் போது, முகத்தில் ஒரு தனிப் பொலிவு தென்படும். அவர்தம் திருநீறு அணிந்த மேனி, கண் கொள்ளாக் காட்சிதரும்.

திருத்தொண்டுகள்

திருக்கோயில் திருமுழுக்காட்டு விழாவுக்கு இவர் தான் தலைவர். மாநில அளவில் சிறந்த கோயிலைத் தெரிந்தெடுக்கும் குழுவுக்கும் இவரே தலைவர். அண்மையில் புதுவை வேதபுரீசுவரர் திருக்கோயில் இவர் முயற்சியால் செப்பனிடப்பட்டுத் திருமுழுக் காட்டுவிழா நடைபெற்றது.

வரலாற்று மதிப்பீடு

திருக்கோயில்களை இவரோடு சென்று காணவேண்டும். முகப்புத் தோற்றத்தைக் கண்டவுடன் இன்ன காலம் என்பார். அங்கே உள்ள கல்வெட்டுகளும் அதனை ஆமோதிக்கும். கோயில் கட்டடத்தின் ஒவ்வொரு வரிமானத்துக்கும் விமானத்தின் ஒவ்வொரு அமைப்புக்கும் பெயர்கள் சொல்வார்.

செப்புத் திருமேனிகளின் அழகை இவர் பருகுவது போல் வேறு யாராலும் முடியாது. அங்கம் அங்கமாகச் சுவைப்பார். நெடுநேரம் நின்றுவிடுவார். அவர் சொல்லுவதை ஆவலோடு கேட்பேன். முதலில் ஒரு சமஸ்கிருத சுலோகம்; பின்னர் விளக்கம்; விளக்கத்துக்குரிய திருமேனியை அவர் விரல் சுட்டிக் காட்டும். திருமேனியின் சாயல், அணிகளின் பெயர்கள், அவற்றின் காலம், அத்தனைக்கும் விடை கிடைக்கும்.

சிற்பமாயின் அதன் வடிவமைப்பு செய்திறன் நுட்பமான வேலைப்பாடு–இவற்றை எல்லாம் பிரித்துக் கூறுவார்.

கழுத்து மாரியம்மன், திரௌபதியம்மன், பழனி ஆண்டி முதலான தெய்வத் திருமேனிகளின் அமைப்பு முறைக்கு ஆகமங்களில் சான்றுகள் இல்லை. இவ்வடிவமைப்பு மிகப் பிற்காலத்தில் தமிழ்நாட்டுக்கு வந்தவை. ஒரு குறிப்பிட்ட இனத்தவரைக் கூறி, அவர்கள் எங்கே பெருவாரியாக உள்ளனரோ அங்கேதான் திரௌபதியின் கோயில் இருக்கும் என்பார்.

கோயில்களில் பயன்படுத்தப்பெறும் இசைக் கருவிகளின் பெயர், அவற்றைப் பயன்படுத்தும் முறைகளைக் கூறுவதோடு, அவற்றுள் இன்னின்ன நேரங்களில் இன்னின்ன கருவிகள் - ஒரு சில கோயில்களில் மட்டுமே இசைப்பதற்கான காரணங்களைத் தெளிவாக விளக்கவல்லார் இவரன்றி வேறொருவர் உண்டோ?

கலையின் உண்மை வெளித்தோற்றத்தில் அவசரமாய் நிகழ்வதல்லவே! கலைப்பொருளைச் சுவைக்க வேண்டுமானால், இவருடன்தான் செல்ல வேண்டும். இத்துறையில் இவரே எனக்கு மதிப்பு மிக்க குருநாதர்.

எத்தகைய நாத்திகர் ஆயினும் இவரோடு பழகிய சிலநாட்களிலேயே "நீ பித்தனாய் இரு; உலக மாயையில் அல்ல, இறைவனிடம் உள்ள அன்பில்!" என்று உபதேசம்செய்யத் தொடங்கிவிடுவார்.

மணிவாசகர் பற்றுளர்

மணிவாசகப் பெருமானிடம் இவர் ஈடுயிணையில்லாத பக்தி கொண்டவர். எந்நேரமும் திருவாசகத் திருப்பதிகங்களில் வருகின்ற சில தத்துவக் கருத்துக்

களைப்பற்றி விவாதித்துக்கொண்டே இருப்பார். இவருடைய இறுதி விருப்பம் மணிவாசகர் வாழ்ந்த காலத்தைத் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும் என்பதே. அதற்கான முயற்சியில் மிகுந்த அளவு ஈடுபட்டார்.


மணிவாசகரின் ஊரான திருவாதவூருக்குச் சென்று அவ்வூர்ச் சிவன் கோயிலில் காணப்பெறும் கல்வெட்டுகளில் ஏதேனும் குறிப்புகள் உள்ளனவா என்று, எங்களை ஆராயச் செய்தார். இவ்வடியாரைப் பற்றி அக்காலத்திய வெளிநாட்டுப் பாதிரியார்கள் எழுதி வைத்த குறிப்புகளையெல்லாம் சேகரித்தார்.

மதுரையிலிருந்து அவருக்குக் கிடைத்த சில காசுகளில் குதிரை உருவம், பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்டு, அது மணிவாசகரின் வரலாற்றோடு இணைந்த நரியைப் பரியாக்கிய கதையைக் குறிப்பதாக இருக்கலாமோ என்று எண்ணினார்.

திருவாசகப் பதிகங்களின் சில பெயர்கள், அதனை ஒத்த வேறு இலக்கியங்களில் காணப்படாமை பற்றி பல அறிஞர்களின் — சமயவாதிகளின், கருத்துரைகளை இவர் கேட்டறிந்தார்.

இவருக்குத் திருவாசகத்துள் திருவண்டப் பதிகம் மிகப் பிடித்தமான ஒன்று. மணிவாசகரைப்பற்றி இதுவரை யார் யார் என்னென்ன கருத்துகளை வெளியிட்டனரோ அவற்றையெல்லாம் தேடித் தொகுத்து வைத்தார்.

அடியாரின் காலத்தை அறுதியிட்டு முடிவு செய்ய வரலாற்று அடிப்படையில் கல்வெட்டோ, செப்பேடோ கிடைக்காதா என்று ஏங்கியிருந்தார்.



இணைபிரியாத் தோழரும் தொண்டருமான
திரு. இராமாநுசமும், குழந்தையாக மூத்தமகன்
அசோக்குமாரும்

மணிவாசகப் பெருமானின் காலவரையறை அவரைத் திணற வைத்தது.

வைணவப் பெரியார் இராமாநுசர்மீது அளவற்ற பற்று கொண்டவர். எதற்கெடுத்தாலும்—இராமாநுசரின் விளக்கத்தைத் தனக்குத் துணையாகக் கொள்வார்.

அணுக்கத் தொண்டர்

ஐயாவுக்கு அணுக்கத் தொண்டர் ஒருவர் உண்டு. அவர் ஐயங்கார். அவர் பெயர் இராமாநுசம். அழுத்தமான வைணவர். இருவரும் ஒருசாலை மாணுக்கர். இருவரும் இளமைக்கால நண்பர்கள். முதுமைக காலத் துணைவர்கள்.

இவருக்கு அயர்ச்சி வரும்போதெல்லாம் 'இராமானுசா' என்றுதான் அழைப்பார். இராமாநுசம் ஓடி வருவார், வேண்டியதை, விரும்பியதைச் செய்வார். 'இந்த செட்டியார் சைவராக இருந்தும், தன்னை மறந்து என்னை அழைப்பதன் மூலம்; எங்கள் இராமாநுசரின் திருநாமத்தைத் தோத்திரம் செய்கிருரே கேட்டீரா?' என்று சொல்லி அவர் பெருமிதம் கொள்வார்.

அருளாளர் அன்பர்

காஞ்சிபுரம் காமகோடிபீடம் பெரியவர், ஐயா அவர்களின் ஆற்றல், ஆன்மிகத்தை நன்கு அறிந்தவர். புதுவையிலிருந்து யாரேனும் அவரிடம் சென்ருல் ஐயாவைப்பற்றிக் கேட்டறிவார்.

வைணவப் பெரியாரான பிரதிவாதி பயங்கரம் திருமிகு P. B. அண்ணங்கராசாரிய சுவாமிகள் ஐயா அவர்களைப் பெரிதும் விரும்புவார்கள்.

இப்பெருந்தகையாளர், நடாளுமன்றத் தேர்தலில் ஐயா அவர்கள் வெற்றி பெற்றதைக் கொண்டாட வெற்றி மலர் வெளியிட்டவர்.

தருமை, துறைசை, பனசை ஆகிய தமிழ்நாட்டு முப்பெரும் சைவ மாமடங்களின் பட்டத்து குருமகா சன்னிதானங்களின் அருளாசியைப் பெற்றவர்.

மதுரை குருமாகாசன்னிதானம் இவருக்கு மிகவும் நெருக்கமானவர். மைலம், குன்றக்குடி முதலான ஆதீனங்களோடும் இவருக்குப் பழக்கமுண்டு.

இவ்வாறு வழிபாட்டோடும், இறைபணி மன்றங்களோடும் தம்மை இறுக்கமாக இணைத்துக்கொண்ட இவரை, 'இருள்சேர் இருவினையும் சேராதொழியும்' என்பதில் ஐயமேது?

நெஞ்சம் நிறைந்தவர்

குடியானவனாயினும் கோமானாயினும் ஒரு நாளைக்கு இறக்க வேண்டியவனே! இந்த நிலை அணுகும்போது பிரிகின்ற உயிர், உண்மையான அன்பு உடையவர் ஒருவரை நம்புகிறது. பிரியும்போது மூடுகின்ற கண்கள் அன்புடைய கண்ணீர்த் துளிகளை வேண்டி நிற்கின்றன.

—கிரேஸ் எவிஜி

சென்ற நவம்பர்த் திங்கள் முதலே அவர் உடல் நலம் குன்றியது. அப்போதும் அவர் உள்ளம் உறுதி குலைந்திடவில்லை. சித்த வைத்திய முறையைப் பெரிதும் நம்பினார் இவர் நம்பிக்கை குறையவில்லை; நோயும் குறையவில்லை.

''நல்லாம் கிளினிக்''— புதுவையில் புகழ்பெற்ற தனியார் மருத்துவமனை. எல்லா வசதிகளும் நிரம்பியது. அதன் உரிமையாளர் டாக்டர் நல்லாம்பாபு, ஐயா அவர்களின் குடும்ப நண்பர். இவரிடம் மிகுந்த அன்பும் பற்றும் பாசமும் கொண்டவர். தெய்வபக்தி மிக்கவர். தனக்காகவோ, குடும்பத்துக்காகவோ அன்றி, இந்நாட்டுக்காகவே அவர் உடல் நலத்தோடு வாழ்ந்தாகவேண்டுமென்று இவர் பெரிதும்விரும்பினார் அண்ணலும் அவர் அன்புக்கு அடிமையானார் மருத்துவமனைக்கு வருவதாக ஒப்புக்கொண்டார்.

அறுவை மருத்துவம்

24-11-79 அன்று காலை 8-30 மணிக்கு மருத்துவ மனைக்குச் சென்றார். விருந்தினரை வரவேற்பதுபோல் டாக்டர் பாபு இன முகத்தோடு அகமலர்ந்து வரவேற்றார். ஒரு சில நிமிடங்களில் சிறிய அறுவை மருத்துவம் நடந்தது. அன்று மாலையே வலது காலில் இன்னொரு சிறு அறுவை மருத்துவம் முடிந்தது.

துன்பத்தினின்றும் சிறிதே விடுபட்டு, அவர் அமைதியோடு மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருந்தார். மறுநாளும் இதே நிலை நீடித்தது. தேர்தல் நேரம் வேறு. ஐயாவைப் பார்ப்பதற்கு அரசியல் வாதிகளின் கூட்டமும் அன்பர்களின் கூட்டமும் மருத்துவமனையில் நிரம்பி வழிந்தன. கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதே டாக்டருக்குப் பெரும் சிக்கலாகி விட்டது.

நெருக்கடி நிலை

26-11-79 மாலை ஐயன் உடல் நிலையில் எதிர்பாராச் சிக்கல்கள் தோன்றின. பரிசோதனைகள் விரைவாக நடந்தன. இரு நாள் மகிழ்ச்சியும் இந்த ஒரு நாளில் மங்கத் தொடங்கியது. இரவு 9-00 மணிக்குப் பெருமானார் நினைவிழந்த நிலைக்கு ஆளானார்.

மருத்துவ மனையிலிருந்து நாங்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டோம். ஒவ்வொரு துறையிலும் கற்றுத்துறைபோய வேறு சில டாக்டர்களை நல்லாம் பாபு அழைத்திருந்தார். டாக்டர்களின் கூட்டு முயற்சியே அண்ணலாருக்குத் தேவையாயிற்று. ஏதேதோ மருத்துவக் கருவிகள், மருந்துப் பொருட்கள் அவர் அறைக்குக் கொண்டு செல்லப்பெற்றன.

அவர்கள் விரைந்தோடிச் செயல்படும்போது, அவர்கள் ஓட்டம் எங்கள் இதயத்தின் மீது நடைபெறுவதை உணர்ந்தோம். நம்பிக்கை இழந்தோம்.

காலை 3-30 மணிக்கு இரண்டு மருத்துவர்கள் வெளியே வந்தனர்.

''ஐந்து மணிக்குப் பிறகுதான் நம்பிக்கையாகச் சொல்லமுடியும்; நாங்கள் செய்ய வேண்டியதையெல்லாம் செய்துவிட்டோம். இனி, இறைவன்தான் அவரைக் காப்பாற்ற வேண்டும்.''

ஐயன் உடல்நிலைபற்றி அவர்கள் சொல்லிச் சென்றது இது. டாக்டர் நல்லாம்பாபு எங்களுக்கு அடிக்கடி ஆறுதல் கூறிக்கொண்டிருந்தார். இவர் டாக்டராக அல்ல, ஒரு தொண்டரராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். இப்பொழுது எங்களுக்கு ஒரே நம்பிக்கை ஒளி, நல்லாம்பாபு அவர்களே!

அவர் வெளியே வந்தால் போதும்; அனைவரும் சூழ்ந்து கொள்வோம். ஐந்து மணியைக் கடந்தாக வேண்டும். ஒவ்வொரு மணித் துளியும் எங்கள் இதயத்தின் மீது ஓய்வெடுத்து நடமாடி நகர்ந்து சென்றன.

அழுது புலம்பினேம். யாருக்கு யார் ஆறுதல் சொல்லுவது? ஒருவரை ஒருவர் ஏமாற்றத்தோடு பார்த்துக்கொண்டோம்.

''அழுகின்றவன் பாக்கியவான்; ஏனென்றால் அவன் ஆறுதல் பெறுகிறன்'' என்ற பொன்மொழியின் உட்பொருளை அன்றுதான் முழுதும் உணர முடிந்தது. காரணம், அன்று நாங்கள் அழவில்லையானல், இதயம் வெடித்திருக்கும். அன்றிருந்த அத்தனை உள்ளங்களும் ஐயனை அன்போடு நேசித்தவை.

துன்பத்தின் உச்ச நிலைக்கு வந்து இனி பொறுத்துக் கொள்ளவே இயலாது என்ற நிலை உருவாகும் போதுதான், ஐந்துமணி எங்களைக் கடந்துகொண்டிருந்தது. குடற்புண்ணின் இரத்தக்கசிவும், இதயத் துடிப்பும் கட்டுக்கடங்கி, பெருமானார் ''அசைந்திட்டார், கண் விழித்தார்'' என்றெல்லாம் எங்களுக்குச் செய்திகள் அறிவிக்கப்பெற்றன. டாக்டர் நல்லாம் பாபு அவர்களை நன்றி உணர்வோடு நோக்கினோம். அவர் அன்று செய்த உதவி என்றுமே மறக்க முடியாதது.

தொடர்ந்து இரண்டுநாட்கள் நினைவிழந்த நிலையில் தான் நாட்கள் நகர்ந்தன. எனினும், இப்போது நம்பிக்கைக் குறைவதற்குக் காரணம் எதுவுமில்லை. சிலருக்கு இவ்விருநாட்களில் நடப்பதாக இருந்த அறுவை மருத்துவங்கள் அனைத்தும் நிறுத்தப் பட்டன. அருமை பாபு அவர்கள் இமையெனக் காத்து நின்றார்.

பின்னர் பெருமானார் பேசத் தொடங்கினார். உண்ணத் தொடங்கினார். நாங்களும் சிறிதே உண்ணவும் உறங்கவும் தொடங்கினோம்.

தத்துவங்கள்

இந்நிலைக்குப் பிறகு, ஐயன் பேசுவதெல்லாம் எனக்குத் தத்துவங்களாகத் தோன்றின.

''நான் சென்று விட்டவன், வென்று விட்டதாக உங்களுக்கு நினைப்பா?'

என்பார்.

'நமது இடம் வந்தவுடன் வண்டியினின்றும் இறங்கிக் கொள்வதுதானே முறை!' என்பார்.

'இறைவன் இதுவரையும் கொடுத்த தண்டனை போதாதா? இன்னமும் தண்டிக்கப் போகிறாரா?'

எதன்பொருட்டு இப்படி யெல்லாம்இவர் பேசிக் கொண்டிருக்கிறார்? அழுகை மட்டுமே எனக்கு விடையாக இருக்கும். ஒருநாள் இரவு,

"இந்த நோய் எனக்கு எப்படி வந்தது:எப்பொழுது வந்தது; ஏன் போக்கிக் கொள்ளவில்லை? அனைத்தும் யாம் அறிவோம்! பாவம்! உங்களுக்கு என்ன தெரியும்?"

என்று நாடக பாணியில் பேசினார். இராமாநுசம் அறையைவிட்டு வெளியே வந்து கதறிஅழுதார். நெடு நேரம் அழுது கொண்டிருந்தார். ஐயா எதையாவது நினைத்து அடிக்கடி சிரிப்பார். அவர் குழந்தையாக மாறிவருவதை நான் உணர்ந்தேன்.

படிப்படியாக ஐயனின் உடல் நலத்தில் மீண்டும் மாறுதல்கள் தோன்றின. குடற் புண்ணில் இரத்தக் கசிவு, சிறுநீரகத் தொல்லை என மீண்டும் சிக்கல்கள். வேலூர் கிறித்துவர் மருத்துவக் கல்லூரிக்கு விரை வாகச் செல்ல வேண்டும் என்பது திரு பாபு அவர்களின் விருப்பம்.

வேலூர்ப் புறப்பாடு

21—12—79 அன்று வேலூர் செல்ல வேண்டும் என்பதை ஐயனுக்கு அறிவித்தனர். இப்பொழுதெல் லாம் அவர் மறுப்பேதும் சொல்வதே இல்லை. அவர் எல்லாம் அறிந்தவர். ஆனால் அவரை அறிந்தவர் மிகச் சிலரே. அவருள் ஒருவரான ஐயனின் அருமை நண்பர் முத்தியால்பேட்டை திரு ப. சண்முக முதலியார் குள

மான கண்களோடு வேலூருக்குப் புறப்பட்டார். குடும்ப நண்பர் திரு N. R. பட் அவர்களும் தளர்ந்த உள்ளத்தவராகப் பயணமானூர். பெருமானின் மூத்த மகன் அசோக்குமார் வாடிய முகத்தோடு உடன் சென்றூர்.

பெருமானூர் வேலூர் செல்லவிருக்கும் செய்தி கேட்டு மக்கள் கூட்டம் மருத்துவமனையில் நிரம்பி வழியத் தொடங்கியது. 'அவர் எவ்வளவு பெரியவர்! எத் தகைய பண்பாடு மிக்கவர்!' என்பதை இப்போதுதான் எல்லாராலும் உணர்ந்துகொள்ள முடிந்தது. கூட்டம் அவரை வாழ்த்தி வணங்குகிறது. இறைவனின் அருள் வேண்டி பிரார்த்திக்கிறது.

நினைவு நின்றது

இரவு 3.30.மணிக்குத் தென்னிந்தியப் புகழ் வேலூர் மருத்துவமனையில் அண்ணலார் சேர்க்கப் பெற்றூர். முன்னர் தவத்திரு ஞானியார் அடிகள் உடல் நலம் பேணிய இடம் அல்லவா! ஆகவே அனைவருக்கும் நம்பிக்கை பிறந்தது. அரசியல்வாதிகளும் மிகப் பெருஞ்செல்வர்களும் இங்குதானே வருவார்கள். ஆகவே, ஐயனுக்கு இனி குறை நேராது என்பது அனைவரின் ஒருமித்த கருத்தாக இருந்தது.

22—12—79இல் தொடர்ந்து மருத்துவம் நடந்தது. ஐயாவும் பேசிக்கொண்டிருந்தார். துணைவியார் தெரேஸ் அம்மையார் உடனிருந்தார். அவர் அழுது ஓய்ந்த அடையாளங்கள் இன்னமும் மறையவில்லை

''விசயநகரப் பேரரசு அழிவுற்றபோது எஞ்சிநின்ற அரசர்களுக்கு அடைக்கலம் தந்தது. வேலூர்க் கோட்டை. இங்கிருந்துதான் அவர்கள் மீளவும்புத்துயிர்

பெற்றனர். இவர்கள் இந்து மதக் காவலர் அல்லரோ! வேலூர் பொம்மு நாயக்கனை வரலாறு மறக்காது!'

என்று என்றோ ஒரு நாள் ஐயா கூறியவாசகங்கள் என் நினைவலையில் மிதந்து கொண்டிருந்தன. இவரும் இந்துமதப் பற்றுள்ளவர்! வேலூர் வந்திருக்கிறார்! புத்துயிர் பெறுவார்! என்றெல்லாம் எங்களுக்கும் நம்பிக்கை இருந்தது.

இரவு நான்கு மணி; அண்ணலார் மீண்டும் நினை விழந்தார்; மருத்துவர் வந்தனர். மறுநாள் காலையில் (23—12—79) மருத்துவம் தீவிரமாகியது. என்ன செய்தார்கள் என்பது எங்களுக்குத் தெரியாது. ஏதோ செய்துகொண்டிருந்தார்கள். நாங்கள் அறைக்கு வெளியில் இருந்து பார்த்துக்கொண்டிருந்தோம்.

26—11—79 அன்று நல்லாம் கிளினிக்கில் நிகழ்ந்த பரபரப்பு, திருநல்லாம் பாபு அவர்களின் கனிந்த முகம், அவர்தம் உழைப்பு, பொறுப்பு ஆகியவை என் மனத் திரையில் நிழலாடின. பெருமானை வீட்டுக்கு அழைத் துச்சென்றிருக்கலாமே என்ற எண்ணம் தோன்றியது. இப்படித் தோன்றியதற்கு என்ன காரணமோ?

23—12—79 காலை முதலே சிவனருள் ஐயாவை நெருங்கிக் கொண்டிருக்கிறது; துணைவியார் நெஞ்சம் உடைந்து நிலைகுலைந்து செயலற்றுக் காணப்பெறு கிறார். நாங்கள் நாங்களாக இல்லை. இறுதி முயற்சியை மருத்துவர் மேற்கொண்டார். என்றாலும், சிவனருளை அவரால் தடுத்து நிறுத்த முடியவில்லை. நண்பகல் 12.25 மணிக்குத், திரையை மூடித் திரும்பிவிட்டார்.

சிவமயம்

அண்ணலார் சிவமயமானார். நாங்கள் எங்களை மறந்தோம். அம்மையாரின் திருமுகத்தை ஏறிட்டுப்

பார்க்க!எனக்குத் துணிவில்லை. அந்த முகத்தில் ஐயா வைப்பற்றிய நினைவு, தனிமை, அச்சம், பிள்ளைகளின் எதிர்காலம் முதலான எண்ணற்ற கவலைகள் குடி கொண்டிருப்பதைக் கண்டேன்.

வினைப்பயனை யாரால் தடுக்க முடியும்? என்ற ஐயாவின் பொன்மொழி என்னுள் நிலைத்து நின்றது.

அண்ணலாரின் அருமைத் திருமேனியை அன்று இரவு 8.10 மணிக்குப் புதுவைக்குக் கொண்டு வந்தோம்.

எண்ணத்தின் நோக்கம்

அவர் திருமேனியைப் புதுவைக்குக் கொண்டு வர ஏறத்தாழ ஐந்துமணி நேரம் ஆயிற்று, ஊர்தியில் ஐயனோடு பயணம் வரும்போது என் எண்ணங்கள் பின்னோக்கிச் சென்றன.

நானும் எஸ். இராமநுசமும், க. அப்பாசாமியும் ஐயனின் அருமைத்துணைவியாருடன் அவருக்கு இறுதி வரைத் தொண்டு செய்கின்ற பெரும்பேறு பெற்றமையை நினைந்து, இறைவனின் திருவருளைச் சிந்தித்தேன்

நமது உழைப்பும் முயற்சியும் நம்பிக்கையும் விழலுக்கிறைத்த நீராயினவே என்று வருந்தினேன்.

'என் பாவங்களை நானேதான் அனுபவிக்க வேண்டும்; அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். இவற்றை என்னிடமிருந்து நீங்கள் பெற்றுக் கொண்டு, என் வேதனையைக் குறைக்க முடியாது! என் இறுதிக்கால ஒத்தாசைக்கு உங்களையாவது இறைவன் அனுப்பியிருக்கிறானே, அதுதான் நான் செய்த புண்ணியம்!'

ஒருநாள் இரவு இரண்டரை மணிக்கு அவர் இவ்வாறு சொன்னபோது: அறிந்தேதான் சொன்னூர் என்பதை, இன்றைக்கு உணர்கின்றேன்

எப்படியோ ஒரு பேரரசு வீழ்ந்துவிட்டது, பொற் காலம் முடிந்து விட்டது. அன்பர் உள்ளங்களில் வெறுமை குடி புகுந்தது. வாழ்கின்றவர் உள்ளங்களில் இவர் என்றென்றும் வாழ்பவரே!

திருஉலாக் காட்சி

24—12—79 அன்று மாலை ஐந்து மணிக்கு பெரு மானின் இறுதிப் புறப்பாடு தொடங்குகிறது. மக்கள் வெள்ளத்தில் ஐயனின் திருமேனியைத் தாங்கிய ஊர்தி ஊர்ந்து வருகிறது. அன்றைய கூட்டத்தை இன்று வரை இப்புதுவைப்பதி கண்டதில்லை. இனி, காணப் போவதுமில்லை.

இவர் ஓர் ஆலமரம்- அண்ணலின் அருமை மைந்தர் இருவரும் விழுதுகளாக இவர்தம் புகழைத் தாங்கி நிற்பார்கள். ஐயனின் அடிச்சுவட்டைப் பின் பற்றுவார்கள்.

வரலாற்றை வளர்த்த சாதனையாளர், வரலாற்றில் நிலைத்து நிற்பார்!

வாழ்க அவர் புகழ்!

கண்ணீரோவியம்!

புலவர் அரிமதி தென்னகனூர்

தலைவர், குறள் நெறி மன்றம்,
புதுவை

இராமனென் னும்பெ யர்க்கே
எதிரியாய் இருந்தேன்; சேது
இராமனே! உன்னால் அப்பேர்
இனித்ததும் உண்மை! என்னை
இராவணப் பற்றி னோடே
இருத்தவும், இராமக் காதல்
இராமலே போக்க வுந்தான்
இறப்புல கம்சென் றாயோ!

தந்தை, தாய் இருக்கும் போதே
தந்தை, தாய் இழந்தே னாகும்
விந்தையை ஏனோ ஐயா
விளைத்தனை! உன்னைத் தானே
தந்தை, தாய் என்று வாழ்ந்தேன்
தனியனாய் என்னைச் செய்ய
சிந்தித்த தேனோ? என்னே
செய்தனை! அறந்தா னோ,சொல்?

மணிவிழா நீகாண் நாளில்
　　மலருளம் மகிழ்,தேன் சிந்த
அணிபல செய்தும் உன்றன்
　　அடியிணை தொழுதும் நீசெய்
பணிகளைப் பட்டம் தந்து
　　பரவியும் பாராட் டிந்தும்
அணைத்தெனை வாழ்த்தப் பெற்றும்
　　ஆடிடும் ஆவல் தீர்ந்தேன்!

வெற்றிலை குழைவாய் எங்கே?
　　விழிகளின் சிரிப்பும் எங்கே?
கற்றவர் சுற்றம் சுற்றும்
　　கருத்துரை மன்றம் எங்கே!
உற்றஎன் துணையே! நீதான்
　　ஓடிய இடமும் எங்கே?
பற்றுடன் அழைத்துப் போற்றும்
　　பரிவுளம் எங்கே! எங்கே!

உனக்கெனப் பலபேர் உள்ளார்;
　　உயர்ந்தவா!: அன்பை ஊட்ட
எனக்கென ஒருவன் தான், நீ
　　இருந்தனை! இனியா ரப்பா?
மனக்குறை என்ன ஐயா!
　　மறைந்திடப் பிழைசெய் தார்,யார்?
நினைத்திடும் நெஞ்சில் வீற்று
　　நிலைத்திட வோ,சென் றுய்நீ!


நல்லாரை இழந்தது நாடு

கவிஞர் த. கோவேந்தன்

சென்னை

மதுவை நினைத்துத் தமிழ்மடையர் சென்றால்
புதுவைச் சிறப்பு— புரட்சிக் கவியரசும்
ஆனந்த ரங்கமும் அன்பின் அரவிந்தரும்
வானளந்த செல்வர் திருமுடி சேதுராமச்
செட்டியாரும் என்று செப்பும் படிக்கங்கே
கெட்டியாய் வாழ்ந்த தமிழின் களஞ்சியத்தை
எண்ணும் படிச்செய்த ஏற்றமன்னர் மன்னனென
உண்ணும் படிச்செய்து, பாவேந்தர் வாழ்வெல்லாம்
காது படச்செய்தார், கண்ணில் தெரியும்வணம்
தோதுபடச் சொன்னார் திருமுடியார், என் தோழர்
தங்கப்பா வோடொருநாள் சென்றேன் தமிழோடு
தங்கப்பா என்றார்; தமிழுணவை உண்ணும்
பொழுதில் புலவர் ஒருவர் இருவர்
தொழுது வணங்கியங்குத் தோன்றிடுவார், செட்டியார்
உள்ள மகிழ்ச்சிக்கும், ஓங்கும் உணர்ச்சிக்கும்
வெள்ளப் பெருக்கெல்லாம் ஈடா? விருந்தான
கற்ற புலவர்களைக் காமுற்று பட்டிமன்றம்
உற்ற வெறிநாய்கள் ஊத்த மொழிகளினைக்
கிண்டல் புரிந்திடுவார்; கேடு புரிகின்ற
மிண்டர் தமைச்சிரிப்பார், மேலான உண்மைக்குத்
தாமுவந்து நிற்பார்; தமிழ்ப்புலவர் மற்றவர்


தாமுவக்கத் தாமறிந்த மூத்தோர் அறிஞர்
அரசியலார், வையத் தறிவியலார், பண்ணின்
வரலாறு, பண்பாட்டு வாழ்க்கை, கல்வெட்டு,
எத்துறையில் யார்யார் இயங்கி உழைத்திடுவார்
அத்துறையில் அவ்வவர்க்கு ஆன்ற உதவியுடன்
மேலான தேசெய்யும் மேட்டிமைகள் செய்திடுவார்;
நூலான தெத்தனையோ அத்தனையும் நோக்கிடுவார்,
நொந்தார்க்கும் வந்தார்க்கும் நூறு துணையாவார்.
செந்தேனாய் என்னையும் சேகர் பதிப்பகத்துச்
சுந்தரம் தன்னையும் தோதாய் எலாம்தந்து
நள்ளிரவு வேளை நகர்ந்தாலும், தாம் நகரா
தள்ளி விழுங்கென்று ஆயிரம் சேதிகளைச்
சொல்லுவார்—சொல்லுக் கெதிர்சொல்லைச்
சொன்னவுடன்
வெல்லுவார். அந்தநல் வெற்றிச் சிரிப்பழகர்
இல்லைஎன்றார் அந்தோ இனிப்புதுவை செல்லுங்கால்
எல்லையிலாத் துயரம் எய்தும் படிக்(கு)அடடே!
பொல்லார் பலரிருக்க போய்இவர் மாண்டாரே
நல்லாரை நீத்தது நாடு.



வரலாறு படைத்த வள்ளல்


திருமுடி ந. சேதுராமன் அவர்கள்


வரலாற்றுக் களஞ்சியமாக
விளங்கிய



தோற்றம் :
23—1—1924

மறைவு :
24—12—1979



தந்தை : நடராச செட்டியார்
தாய் : குசலாம்பாள் அம்மையார்
மூத்த மகன்
திருமுடி சேதுராமனார்
இளைய மகன்
திருமுடி வேல்முருகனார்



மொரிஷியஸில் செட்டியாரின் முன்னோர்
எடுப்பித்த சிவன் கோயில்



மொரிஷியஸில் பண்ணையின் ஒருபகுதி.




துணைவியார் தெரேஸ் – இளைய மகன் அருண்




இந்தியத் தலைமை அமைச்சர் நேருஜி அவர்களுடன்



குடியரசுத் தலைவர் இராஜேந்திரப் பிரசாத் அவர்களை வரவேற்கிறார்



பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடன்



உள்ளம் கலந்த உண்மை நண்பர்
மேயர் திரு. காசிம் அவர்களுடன்




குடியரசுத்தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களுடன்



குடியரசுத்தலைவர் வி. வி. கிரி அவர்களுடன்




குடியரசுத்தலைவர் பக்ருதீன் அலி அகமது அவர்களுடன்



மத்தியஅமைச்சர் ஜகஜீவன்ராம் அவர்களுடன்




திருமுடியாரின் திருக்குமாரர்கள்



திருமுடியாருக்கு அடுத்து குடந்தை ப. சுந்தரேசனாரும் இந்நூலாசிரியரும்


௬௦ ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சிகளில்...



இராசாம்பாள் & மைதிலி திருப்பட்டாடை
செட்டியாருடன் தங்கை



இலக்கியச் செல்வரும் வணிகப் பெருமகனுமான
திரு நா. கோவிந்தசாமி தம்பியருடன்



அமைச்சர் காங்கேயன், புதுவை முதல்வர்
வெங்கடசுப்பாரெட்டியார், கம்பன் அடிப்பொடி
சா. கணேசன் முதலிய அறிஞர்கள் நிறைந்த
அவையில் சேதுராமன் அவர்கள்
சொற்பொழிவு செய்கிறார்

முற்றுப் பெற்ற வெற்றித் தலைவர்



தலைவன் திருமேனிக் கருகில்
துணைவியின் துயரக் காட்சி

மறைந்தும் மறையாத மாமேதை

கொற்றவன்
கொலுவிற்றிருந்த காட்சிக் கூடம்



கலை வளர்த்த பெருமன்றம்



நினைவலைகள்

தேசபக்தர்

மாண்புமிகு சிலம்புச் செல்வர்

டாக்டர் ம. பொ. சிவஞானம்

தமிழக மேலவைத் தலைவர், சென்னை.

புதுவை திருமுடி. ந. சேதுராமன் அவர்களை நான் நன்கு அறிவேன். 1948-ஆம் ஆண்டில் புதுவையில் இரண்டு வார காலம் ஒரு நண்பர் இல்லத்தில் தங்கியிருக்க நேர்ந்தது. அப்போதுதான் சேதுராமன் அவர்கள் எனக்கு அறிமுக மானார். ஒன்றிரண்டு சந்தர்ப்பங்களில் தமது இல்லத்துக்கு அழைத்துப் போய் மிகுந்த கனிவுடன் எனக்கு விருந்தளித் தது நினைவிருக்கிறது. பழகுவதற்கு நல்லவர்.

அவரை நான் மிகவும் நேசித்ததற்குக் காரணம் தெய்வப்பற்று–தேசபக்தி-தாய்மொழிப்பற்று ஆகிய மூன்றை யும் அவரிடம் கண்டதுண்டு. யான் சார்ந்துள்ள தமிழரசு இயக்கத்தின் தத்துவமே இவைதாம்.

புதுவையில் அவர் நடத்திய அரசியல் கூட்டங்களிலும் இலக்கிய நிகழ்ச்சிகளிலும் நான் கலந்து கொண்டிருக் கிறேன். அவர் மரணமடைந்ததை அண்மையில் செய்தித் தாளில் படித்து அதிர்ச்சியடைந்தேன். சிறந்த தேச பக்தரை — தெய்வபக்தரை — தாய்மொழிப் பற்றுடை யாரை இழந்து விட்டோம். அவரது ஆன்மா அமைதிபெற இறையருளைப் பிரார்த்திக்கிறேன்.

தேசபக்தியுடைய திரு சேதுராமனின் சேவை புதுவைக் குத் தேவைப்படும் நேரமிது. மறையக்கூடாத வயதில் அவர் மறைந்துவிட்டார். இழக்கக்கூடாத நேரத்தில் அவரை இழந்துவிட்டது புதுவை.

என்றுமுளார் திருமுடியார்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

தமிழ்த்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்

புதுவைக்குப் பெருமை சேர்த்த பெருமகனார் திரு. ந. சேதுராமன் அவர்கள் 'இன்றில்லை' என்கிறார்கள். என்றால் அதை ஏற்க முடியவில்லை. புகழால் வாழும் வாழ்வு பெற்றுள்ளார் என்று தேற்றிக் கொள்ளும் உணர்வு முந்தி அவருக்குக் கைகூப்பத் தோன்றுகிறது.

செல்வர்க்கெனத் திருவள்ளுவர் சொல்லி வைத்த இலக்கணங்களின் இலக்கியமாய்த் திகழ்ந்தவர் அவர். 'ஆர்க்கும் இடுமின், அவர் இவர் என்னன்மின்' என்னும் திருமூலர் திருமொழிக்குச் சான்றாய் விளங்கியவர் அவர். எல்லார்க்கும் வரமளிக்கும் வரமாக வாழ்ந்தவர் அவர். அந்த 'வரம்' கல்வியாக பொருளாக அருளாக அறமாக எப்படி வேண்டுமானாலும் இருக்கும். தகுதியறிந்து வேண்டுவதறிந்து துணைநின்றவர் அவர்.

'என்றுமுளார் எங்கள் திருமுடியார்' என்று சொல்லி, அவரைப்போலப் புகழார்ந்த வாழ்வு வாழ புதுவையின் இளைய தலைமுறையினர் அவரையே முன்மாதிரியாகக் கொள்வர் என்று நம்புகிறேன்.

வரலாறு படைத்த வள்ளல்

டாக்டர் இரா. நாகசாமி

இயக்குநர், தமிழ்நாடு தொல்பொருள்
ஆய்வுத் துறை, சென்னை.

புதுவை ந. சேதுராமச் செட்டியார் அவர்கள் புகழுடம்பெய்தினார்கள் என்று கேட்டபோது...அவர்களது அன்பும், பண்பும், பரிவும், அகத்தெழுந்து பொங்கி வந்தது என்று சொல்லுகேனோ; ஒரு பெருந்தகை, வரலாற்றிலே பண்பாட்டிலே, கலையிலே தம்மனதைப் பறிகொடுத்ததோடன்றி அவற்றில் சிறு ஆர்வமுடையோரே ஆயினும் அவர்களையும் ஊக்குவித்து அதில் முழுமையாக ஈடுபட்டு முழுமனிதராகிய பெருந்தகையை இனிப் பூதவுடலில் காண இயலாது என்று எண்ணுகையில் கண் கலங்குகின்றன எனக் கூறுகேனோ; இல்லை, புதுவைக்கு வரும் அனைவரையும் அழைத்து, தமது இல்லத்திலே அன்போடு அமுது கொடுத்து மகிழ்ந்து ஒருநாட் செல்லலம், இருநாட் செல்லலம், பலநாள் பயின்று பலரொடு செல்லினும் தலைநாள் போன்று விரும்பினன் மாதோ'' என்ற சங்கப் பண்பிற்கு ஏற்ப உபசரித்த பெருந்தகை, வியன்புலத்தே விண்ணோர்க்கு அமுதளிக்க சென்றுளரோ எனக் கூறுகேனோ; யாது கூறுவேன் எனத் தெரியாத ஜடமாகி நிற்கிறேன் ஐய!

20 ஆண்டுகட்கும் முன்னர் சென்னை அரசினர் பொருட்காட்சியில் கலைப்பிரிவில் நான் பணியாற்றியபோது புதுவை என்.எஸ். செட்டியார் அவர்கள் தம்மிடமிருந்த கலைச் செல்வங்களை அருங்காட்சியகத்துக்கு அன்பளிப்பாய் உடைமை யாக்கியபோது, அதை அரசின் சார்பில் பெறும் பேறு பெற்றவன் யான். அன்று தொடங்கி இன்றுவரை அவரைஉள்ளத்தின் உள்ளே ஓர்ஆதர்ச மனிதராகப்போற்றி

வணங்கியவன் யான். கலைச் செல்வங்களை மக்களின் உடைமையாக்கிய மாண்புமிக்க செல்வப் பெருந்தகை அவர். புதுவை நகர் செல்லும்போதெல்லாம் இன்முகத்தோடு வரவேற்று கலைபற்றியும் வரலாறு பற்றியும் எடுத்துரைத்து அளவளாவிய அண்ணல் அவர்.

இரவு வெகுநேரம் வரையில் கலையையும் வரலாற்றையும் தமக்கே உரியநகையோடு எடுத்துரைத்து, அதில் பெறும் இன்பம் தெய்வலோகத்துப் பெறும் இன்பத்தைவிட பன் மடங்கு பெரியதென இன்பம் துய்த்த பெருந்தகை அவர். தமிழகத்தின் தனிப்பெருஞ் செல்வர் அவர். வரலாற்றுப் பேரவையின் தலைவராய்த் திகழ்ந்து, புதுவை வாழ் இளைஞர்களை ஊக்குவித்த ஒப்பரும் வள்ளல் அவர். புதுவைக்கு வரலாறு படைத்தவர். புகழுக்கும் வரலாறு படைத்தவர். அவர் புகழ் போற்றும் அன்பர்க்கும் அடியேன்.

Mr. Tirumudi N. SETHURAMAN

Dr. N. R. BHATT

Head of Sanskrit Department
French Institute of Indology
Pondicherry.

On April 1, 1956, when I Joined the French Institute of Indology, I was introduced to Mr. Sethuraman by Mr P.Z. Pattabiraman the Archaeologist. When I met him for the first time I was really amazed to see such a magnificient personality. It was really like meeting with a royal person. His appreciation for learning and partornage for scholars made me stay in his palacial house, in which I have continued to stay till today During this period I have been observing his manifold activities and his contact with persons in all walks of life. Here was a person who had imbibed philosophy into practical life. The rich and the poor could approach him at all times and the cordial treatment to both was same. This is exactly what the Bhagavadgita teaches. He was helping all those who came to him in need, but as the proverb "says the left hand did not knew what the right hand did". All knew that he was a charitable person, but no one including his wife knew the details of the charity. Here was a man who was self-made, who was a very good scholar in Tamil and Archaeology, who knew Sanskrit, French and English, and who could speak in different languages of India. Though Sivaite by religion, he was well versed with not only all other Indian religions, but also with other religions of the world. Many times he was giving discourser in christian

or Islam conferences. He was spending his spare time in reading books, and his memory power was a mazing. He never maintained any regular accounts,but could remember precisely all transactions.

During our archaeological tours or our tours for search for manuscripts he came with us manytimes. Just his personality and his pleasing words were so helpful that our work was made very easy. People who met him once would remember him for life time. During my stay in his house, apart from the mass of political leaders, I have seen Indian and foriegn scholars meeting him to obtain needed informations for their research work. So many heads of mutts had camped in his royal dwelling. I doubt very much if there is any one in Pondicherry state who has not visited his house or been his guest at least for once. He was the only person available who could give correct information about the historical facts relating to Pondicherry. His house has been always a dwelling place for poor students, suchwas his interest for learning and culture.

Now the Pondicherry State has lost one of his distinguished sons, a helper of poor in need, an intelligent political leader, a patron of culture and art. An uncrowned prince has left us. We hope god blessing his sons will fill up the gap.

ஒரு மனிதர்

மனசை. ப. கீரன்

வானொலி நிலையம், சென்னை

மூவேந்தர் சடையப்பர் சீதக் காதி
முகிழ்த்தகொடை வள்ளல்கள் என்பார்! இந்நாள்
நாவேந்தர் புதுவையுற்றோர் எல்லாம் போற்றி
நலம்புரிந்த பெருந்தகையார் சேது ராமன்!

சட்டமன்றில் நாடாளு மன்றில் ஓங்கும்
சால்புயர்ந்த புதுவைக்குப் பெருமை சேர்த்தார்!
திட்டமிட்ட வளர்ச்சிக்குத் துணையாய் நின்றார்!
தென்னர்சீர் இலககானூர் சேது ராமன்!

நேருபிரான், நிலையுயர்ந்த ராஜன் பாபு,
நெஞ்சிணைந்த பெரியோர்கள் நண்பர் ஆனார்
யாருடனே பழகிடினும் பேதம் இன்றி
இயல்பாகப் பழகியவர் சேது ராமன்!

பன்மொழிநற் புலவரிவர்; பலரின் ஆற்றல்
பழகிமிகக் கருமுகில்சூல் கொண்டு தேர்ந்தார்!
மன்னுலகில் அறிவையெல்லாம் தமதாய் வென்றார்!
மாண்புறுபல் கலைக்கழகம் சேது ராமன்!

செல்வமுடன் கொடைவிருந்து பழகும் பண்பு
சேர்ந்த ஒரு மனிதரவர் சேது ராமன்!
எல்லோர்க்கும் கலங்கரைநல் விளக்கம் ஆனார்!
இன்றிலையே! அவர்பண்பின் சுவடு செல்வோம்!

புதுவைப் புகழாளர்

டாக்டர் ச. வே. சுப்பிரமணியம்

இயக்குநர், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
சென்னை.

தாய்த் தமிழ்ப் புலமையோடு வடமொழிப் புலமையும் பிரெஞ்சுமொழிப் புலமையும் ஆங்கிலமொழிப் பயிற்சியும் பெற்றிருந்த நல்லறிஞர் இவர். இலக்கியம், கலை, வரலாறு, ஓவியம், சிற்பம், கோயிற் கட்டடக்கலை, தேர் அமைப்புக்கலை, இசை, நாட்டியம், வானவியல், சோதிடம், கல்வெட்டு, அகழ்வாய்வு, பொருளாதாரம், புதுமை நோக்கம் பலசமயப் பொதுநோக்கு, தனிமனித—சமுதாயப் பண்பாடு ஆகிய எல்லாத் துறைகளிலும் தகுந்த அறிவாராய்ச்சியும் தெளிவான கருத்தும் கொண்டவராக விளங்கினார் இப் பெரியார்.

நூலக உயிர்ப் பொருளாக இவர் இயங்கி வாழ்ந்தார். எல்லாம் அறிந்த ஒரு தொகுப்பாக, கலைக்களஞ்சியமாக, கலைச்சுரங்கமாக வாழ்ந்தார்.

புதுவைக்குப் புதுப் புகழ் சேர்த்த இவரே இப்பொழுது புகழுடம்பு பெற்று, புகழாகஎங்கும் நிறைந்து எல்லோருக்கும் ஒளி சேர்க்கின்றார். ஆம்! இது உண்மை! சமுதாயச் சிந்தனையும் தன்னலமற்ற தொண்டும் செயல்களும் கொண்ட நல்லறிஞர், உடலால் மறைந்தாலும் அவர்தம் உணர்வின் ஊற்றம், நெஞ்சின் எண்ண மின் அலைகள் அறிவின் தாக்கம்— ஒளிவீச்சு மறைவதில்லை! அவை இவ்வுல கிடையே பரவிச் செயலாற்றிப் பயன் வளர்த்து நலம் கூட்டி மக்களை உயர்த்தும்!

அறிவால் நினைந்து அன்பால் கலந்து அவர்போல் இருந்து அமைதி பெறுவோம்! அவர் புகழோடு நாமும் புது நடைபோட உறுதிகொள்வோம். அதையே அவர் விரும்பு வார்!

ஏனோ சென்றனன்?

க. தமிழமல்லன் க.இ.

செயலர்,
தனித்தமிழ்க் கழகம், புதுச்சேரி

செல்வமும் கல்வியும் சேர்ந்த புகழோன்;
இல்லில் என்றும் இலக்கியம் வளர்த்தவன்,
அல்லற் பட்டே ஆற்று மாந்தரை
இல்லிற் காத்தே எல்லாம் தந்தவன்;
எல்லாந் தெரிந்தவன்; எல்லா மாந்தரும்
சொல்லாற் புகழ்ந்திடும் சோர்விலாத் தமிழவன்,
முடியாத் திருவினன்; முரியா அன்பினன்;
செடியாய் மரமாய்ச் செழித்த அருளினன்;
எந்த நேரமும் இனிய முகத்தினன்!
சொந்தமென் றவனைச் சுற்றியோர் கோடி
நொந்த நெஞ்சும் நோய்அறும் நாடி!
அடையாக் கதவ அண்ணலைக் கொடியோன்
அடைத்த கதவைத் திறந்தே யழைத்தான்!
மூவாத் தமிழ்க்கே முகிழ்த்திடும் பெரியோர்
சாவா நெறியினைக் காணுதல் என்றோ?
'ஐயா ஐயா' என்றே ஊரெலாம்
அரற்றச் சென்றவன் சேது ராமனோ?
பொய்யா தளிக்கும் பொன்மனப் பெரியோன்
மெய்சாய்ந் தனனெனல் பொய்யா? மெய்யா?
இலக்கிய உலகம் கலக்க மெய்திட
இலக்கிய உலகம் இருளுமா றவன்தான்
ஏனோ சென்றனன்? இருந்தால்,
தானே வளரும் இலக்கியந் தானே!

திருமுடி சேதுராமனர்

தி.வே. கோபாலய்யர்

முதல்வர்
அரசர் கல்லூரி, திருவையாறு

திருமுடி சேதுராமனரைப்பற்றிப் புதுவைப் பகுதியில் அறியாதார் உளராயின் அவர் ஒன்றும் அறியாதாரே. அவர் மாசிலாத மணிதிகழ் மேனிமேல் பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர். சிவனடி மறவாத அச் செம்மலார் வேற்றுச் சமயத்தாரையும் அன்பால் தழுவிப்போற்றும் அரும்பண்பினர். அத்வைத, வைணவ, சைவ மடங்களின் தலைமைத் துறவியரின் வன்ருெண்டராகி அவர்தம் அருளாசி பெற்றவர்.

பழுத்த காந்தியவாதியான அப்பெருமானர் ஏனைய அரசியல் கசிகளை அடுத்தவரும் தத்தமக்கு ஏற்படும் சிக்கல்களைப் போக்கிக்கொள்ள அடுத்த அரும்பண்பினர்.

அருஞ்செல்வர்முதல் செல்வத்தால் எளியவர்வரை அனைவரையும் இன்முகத்தோடு வரவேற்று இன்சொற் கூறி இன்னமுதுண்பிக்கும் இயல்பினர்.

> ''நிலவரை யார்க்கும் நிகழ்வரிதால் நின்போல்
> புலவர் நடுவிருக்கும் பொற்பு''

என்று புலவர்கள் போற்றும் அறிஞர்ஏறு. தமிழ், பிரஞ்சு, ஆங்கிலம், வடமொழி, உருது, இந்தி என்ற மொழிகளைக் கற்றறிந்து சுவைத்த சுவைஞர்

தம் வாழ்நாள் முழுமையும் செவியுணவிற் கேள்வி உடையாராய் அவி உணவின் ஆன்ருேரை ஒப்ப இம்மையில் வாழ்ந்தவர்.

'அடையா நெடுங்கதவும் அஞ்சலென்ற சொல்லும் உடையான் சடையப்பன்' என்று அன்று சடையப்ப வள்ளலுக்குச் சொன்னஅடைமொழிகள் சேதுராமனுருக்குக் குறைவின்றிச் சாலும்.

அவரோடு ஓராண்டுக்காலமே பழகும் பெரும்பேறு பெற்றவன் யான். அவர்தம் மரபிற்கு ஏற்ப ஓராண்டு எனக்குத் தம் இதயத்தில் இடம் அளித்து என் இறுதி மூச்சுக் காறும் என் இதயத்தில் தம்மை நிலையாக நிறுத்தத்தக்க இடம் பெற்ற பண்டமாற்றுச் செய்தவர். அவருடைய நுணுக்கமான இலக்கியப்புலமையும் வரலாற்றுப் புலமையும் இசையறிவும் வியந்தும் நயந்தும் பாராட்டிய சிலருள் யானும் ஒருவன்.

கவரிமா வேறு; கவரிமான் வேறு கவரிமான் என்பது கத்தூரி மான். அதன் வயிற்றின் உட்பையில் கத்தூரி சேமித்து வைக்கப்பட்டிருக்கும். அவ்வினம் கத்தூரிக்காகவே வேட்டையாடப்பட்டு இப்பொழுது நூற்றுக்குக் குறைவான எண்ணிக்கையுடையதாய் இமயச் சாரலில் நன்கு அரசால் போற்றப்பட்டு வருகிறது. அஃது உருவில் பெரியது. சிறிய அழுத்தமான ரோமத்தை உடையது. அதன் தோல்மேல் படுப்பது முட்படுக்கையில் படுப்பதுபோன்றிருக்கும். ஆதலின் அதன் தோல் மக்கள் பயன்படுத்த உதவாதது. அஃது இறந்த பல ஆண்டுகளுக்குப் பின்னும் அதன் மேற்றோலில் கத்தூரி மணம் வீசும்.

கவரிமா என்பது இமயமலையில் வாழும் ஒருவகைப் பசு அதன் உடல்முழுதும் மயிர் அடர்ந்திருக்கும். அது சாது வானது. மக்கள் பால்கறப்பதற்கு உதவுவது. மடியில் பால் கறப்பதற்கு இடையூறாகக்கூட அதன் உடல்மயிர் அடர்ந் திருக்கும். அதன் வால்மயிர் மிகவும் அடர்ந்திருக்கும். அதுவே வெண்கவரியாகவும், கருங்கவரியாகவும் உதவுவது. அதன் உடல்மயிரை ஓரளவு கத்தரித்துவிட்டாலும் அஃது உயிர் வாழாது. எனவே சான்றோர்கள்,

'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னுர்'

'மானம் நோக்கின் கவரிமா அன்ன நீரார்'

என்ருற்போல அதனைக் கவரிமா என்றே குறிப்பிடுகின்றனர். பிற்காலத்தார் கவரிமாவேறு கவரிமான்வேறு என்று அறியாமலே சொற்களைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர் என்று எமக்கு ஒருநாள் சேதுராமனுர் தெரிவித்தார்.

பிறிதொருநாள் அன்றில் என்ற பறவையைப்பற்றிக் குறிப்பிடும்போது, அது இப்பொழுது கோதாவிரிக்கரைப் பகுதியிலேயே காணப்படும் ஒரு பறவை. அது நெருப்பை ஒத்த செந்நிறமுடையது. இதனை நம் சங்கச் சான்ருேர்கள் எவ்வளவு நுணுக்கமாக அறிந்து வைத்திருந்தார்கள் என்று போற்றி, 'நெருப்பின் அன்ன சிறுதலை அன்றில் பிரியின் வாழாது' என்ற அடிகளையும் நினைவுறுத்திஞர்.

திருமாலுடைய வாகனம் எனப்படும் கருடன் நாம் குறிப்பிட்டுவணங்கும் இந்தக் கருடன் என்ற பறவை அன்று. அஃது அஸ்ஸாம் காடுகளில் உள்ளது. மனிதனைவிட உயரமான வடிவினது. அதற்கு அங்கு ஸாயீன் என்பது பெயர். அது தனக்கென ஒரு கூடுகட்டிக் கொள்ளாதது. தன் உணவுக்காகப் பிற உயிரைக் கொல்லாதது. பிறிதொன்று உண்டு எஞ்சுவித்த மிச்சிலை மிசையாதது என்ற செய்திகளை ஓர் உருதுக் கவிதையில் கண்டதாக ஓராண்டைய வைணவ மாநாட்டில் கருடக் கொடியை உயர்த்தியபோது அக் கருடன் பெருமைபற்றிப் பேசிஞர்.

பெரிய புராணத்தில் காணப்படும் அடியார் செயல்கள் இன்றைய பகுத்தறிவுக்குப் பொருந்தாதன போன்று தோன்றினும் அச்செயல்கள் ஒரே குறிக்கோளோடு உணர்ச்சி வசப்பட்டு வாழும் மக்களிடை நிகழக் கூடியனவே என்ற செய்தியை அண்மைக்கால நிகழ்ச்சிகள் வாயிலாக அனைவர் உள்ளத்தும் பொருந்துமாறு பாகூர்க் கோயிலில் ஒருமுறை குறிப்பிட்டார்.

புறத்தே நோக்க நோக்கத்தான் நோக்கியோருக்குப் பல்கலைக் குரிசிலாய்த் தோற்றம் வழங்கிய நம்பெருமானுர் அகத்தே நோக்கல் நோக்கத்தான் நோக்கியோருக்கும் பல்கலைக் குரிசிலாக மிளிர்ந்தார்.

நானும் என் நண்பர் மகாலிங்கம் என்பவரும் ஒருநாள் அவரிடம் உரையாடிக் கொண்டிருந்தபோது திருநெடுந் தாண்டகத்திலுள்ள 'கல்லுயர்ந்த நெடுமதில் சூழ்' என்ற பாடலை யான்பாட, அவர் அப்பாடலில் கூறப்படும் 'சொல் லுயர்ந்த நெடுவீணை' என்பதனை விளக்கி அப்பாடலை எவ்வாறு பாடவேண்டும் என்பதை இசை ஆலாபனத்தோடு பாடிக் காட்டிய ஒலியை இன்றும் என் நண்பர் நினைவுகூர்ந்து வியக்கின்றுர்.

திருமுருகாற்றுப்படையில் குறிப்பிடப்படும் திருவே ரகம் சுவாமி மலையன்று. மலையாள நாட்டில் இன்றும் முருகன் வழிபடப்படும் மலைநாட்டு ஊராக அஃது உள்ளது என்பதனை நன்கு விளக்கிக் காட்டிப் பழமுதிர்சோலைமலை என்ற தொடரும் பொதுவாக மலைகளைக் குறிக்கும் தொடரே யன்றித் தனிப்பட்ட முறையில் சோலைமலை எனப்படும் திருமாலிருஞ்சோலை மலையைக் குறிப்பிடுவதன்று என்பதனை விளக்கியதோடு அறுபடைவீடு என்பது ஆற்றுப்படைவீடு என்பதனைப் பிறழ உணர்ந்ததன் விளைவே ; என்பதனையும் ஒரு நாள் விளக்கிக் கூறியவர் நம் அண்ணலார்.

புதுவையிலுள்ள வரதராசப் பெருமாள் விண்ணகரம் முதல் இராசராசன் காலத்திலேயே இருந்தது. அண்மைக் காலத்தில் அதன் திருப்பணி நிகழ்த்தியபோது இப்பொழுது மூலத்தானத்தின் பின்புறக் கோஷ்டத்தில் இருக்கும் நரசிம்ம மூர்த்தியின் சில கைவிரல்கள் பழுதுபட்டிருப்பதனுல் அதனை விடுத்துப் புதிய சிலையை உருவாக்க முயன்றனர். சிற்பசாத்திர ஆதாரங்களை எடுத்துக் காட்டித் தலையும் கை கால்களும் அடியோடு சிதையுமானுல் ஒழிய ஒரு சிலையைப் புறக்கணித்தல் கூடாது என்பதனை நிறுவி அப்பழைய

நரசிம்மர் சிலையை இப்பொழுதுள்ள கோஷ்டத்தில் பிரதிட்டிப்பிக்கச் செய்தவர் நம் அண்ணலார்.

வேதாரணியேசுவரர் ஆலயத்தில் முன்பு இருந்த மீனாட்சியம்மனின் பெரிய படம் சிற்பமுறைப்படி மனித அமைப்பிலோ தேவ அமைப்பிலோ அமையாமல் பூதஅமைப் பில் ஓவியம் தீட்டப்பட்டிருந்தமையால், அவ்வோவியம் உள்ளவரை அக்கோயில் பொலிவுறாது என்பதனை நூற் சான்று காட்டி நிறுவி அப்படத்தை அப்புறப்படுத்திச் சிவன் கோயில் திருப்பணி சிறப்புற நிறைவேற முயன்றவர் நம் பெருந்தகையார்.

வரலாற்றுத் துறையில் பாகூர் சு. குப்புசாமி, வில்லியனூர் ந. வேங்கடேசன் முதலியோரைக் கொண்டு கல்வெட்டுச் சான்றுகளை நிரலே அமைத்துப் பலநூல்களை வெளியிட்டவர்.

பலமொழிகளிலும் காணப்படும் நுணுக்கமான வர லாற்றுச் செய்திகளைச் சிந்தையில் தேக்கி அமயம் நேரும் போதெல்லாம் எமக்கு அறிவிப்பவர் இவர்.

செங்கிஸ்கானைப்பற்றி அவன் ஒரு கொடிய மங்கோலியத் தலைவன் என்று யான் குறிப்பிட்டபோது நம் அண்ணலார் உரைத்தன பின் வருமாறு:

செங்கிஸ்கான் என்ற மங்கோலியத் தலைவனை நாம் மிகக் கொடியவன் என்றே தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறோம். ஒருநாள் மாலை அவன் தன் கூடாரத்தின் வெளியே வந்து நின்றான். அந்தி மயங்கும் நேரம் அது. மறுநாள் எங்குத் தாக்குவது என்று அவன் உள்ளம் திட்டமிட்டுக் கொண் டிருந்தது. அந்நேரத்தில் பேரழகியான மடந்தை ஒருத்தி அவனை நோக்கித் தன் இயல்பான மென்னடையோடு வந்து கொண்டிருந்தாள். அவளைச் சேய்மையில் கண்ட அளவிலேயே கொடிய போர்ச் செயல்களிலேயே அதுகாறும் ஈடுபட்டிருந்த அவன் உள்ளம், அவள் விரும்பினால் அவளை

மணந்து அமைதியான இல்லற வாழ்க்கையில் இனி ஈடு படலாம் என்று எண்ணமிட்டது. அவள் அவன் அருகில் வந்து 'தந்தையே!' என்று அவனே விளித்த அளவில், அவன் கொண்ட காதற்பற்று தந்தைப் பாசமாக மாறியது.

மகளே! நீ யார்? என்னிடம் யாது வேண்டி வந்துள்ளாய்? என்ற கனிந்த குரல் அவன் தொண்டையி லிருந்து அவன் வாழ்நாளில் முதல் முதலாக வெளிவந்தது.

'தந்தையே! என்னேக் கூர்ந்து நோக்குங்கள். பதினெட்டே பிராயமான நான் இன்று கைம்பெண். உங்கள் வீரர்களின் தாக்குதல் என் துணைவர் உயிரைக் கவர்ந்து விட்டது. இந்நிலே எனக்கு மட்டும் ஏற்பட்ட தொன்றன்று. உங்கள் வீரர்களின் தாக்குதல்களால் என்னேப்போல ஆயிரக் கணக்கான கைம்பெண்கள் இப்பாரத பூமியில் உருவாக்கப் பட்டுள்ளனர்- இனிமேலும் தாக்குதலே நிகழ்த்தாது இவ் விடத்தை விட்டு வெளியேற வேண்டும் என்பதே உம்மக ளுடைய தாழ்மையான வேண்டுகோள்!'

'மகளே! எனக்கு இத்தகைய அறிவுரை கூறியவர் இது வரை ஒருவரும் இல்லே. பிறரைத் தாக்குதலே விளேயாட் டாக நிகழ்த்தி அதனுல் மகிழ்ந்து வந்த என் உள்ளத்தில் மனித இனப்பாசத்தை விதைத்துவிட்டாய். உன் அன்பு ஆணையை இப்பொழுதே நிறைவேற்றுகின்றேன். உன் பெயரையும் முகவரியையும் தந்தையாகிய எனக்குத் தெரி விப்பாய்!'

மறுநாளே படைகள் மீண்டுவிட்டன. தன் நாட்டுக்குத் திரும்பிய வழியில் செங்கிஸ்கான் நோய்வாய்ப்பட்டு இறக்கும் தறுவாயில் 'பாரத தேசத்திலுள்ள என் மகளுக்கு, உன் தந்தை இறந்து விட்டார். உன் சொற்கள் கடைசி மூச்சுவரை அவர் நெஞ்சில் இருந்தன என்று செய்தியனுப் புங்கள்!' என்ருன்.

நேரிய வழியில் நடத்திச் செல்வார் இல்லாமையாலே பலரும் கொடியவர்களாகவே தம்மை ஆக்கிக் கொள்ளும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இவ்வரிய செய்தியை எடுத்துக் கூறிய வரலாற்ருசிரியர் ஒருவரே என்று கூறி, அச்செய்தி அகச்சான்ருேடு அமைந்துள்ள நூல்பெயரையும் அன்று குறிப்பிட்டார்.

அப்பெருமானுர் இவ்வளவு விரைவில் நம்மை நீத்து ஒறுப்பார் என்றறியும் ஆற்றலின்மையால் நூலின் பெயரை யான் குறித்துவைத்துக் கொள்ளவோ நினைவில் இருத்திக் கொள்ளவோ அன்று எண்ணம் கொள்ளவில்லை.

ஓரளவு நண்பர்களோடு உரையாடிக் கொண்டிருந்த போது விடுதலைப் போராட்டத்தில் புதுவை மாநிலத்தின் பங்கினைப்பற்றி நண்பர்கள் வினவ, நிரலாக அவர் குறிப்பிட்ட அருஞ் செய்திகள் ஒலிப்பதிவு செய்து வைத்துக் கொள்ளப்படாமையால் யாம் அன்று கிட்டிய பெரிய வரலாற்றுச் செல்வத்தை இழந்துவிட்டோம். அவருடைய உரை அன்று இரண்டு மணி நேரம் நீண்ட பேருரையாகும்.

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தின் மெல்லோசையில் ஈடுபட்டு அப்பாடல்களைப் பாடியும் நயங்கள் கூறியும் அவர் சுவைத்த திறம் சொல்லினைக் கடந்த பேரின்பமாகும்.

திருமுடி சேதுராமனுர் அன்புருவர்; அருள் வடிவர், கூர்ந்த மதியினர், மாசிலாப் பொதுநலத் தொண்டர், பகைவர்க்கும் உதவி செய்யும் பாங்கினர். சிவனடி மறவாச் சீரியர்.

தம் பெயருக்கு ஏற்ப ‘வசையில் ஐயனுக’ வாழ்ந்தவர் அவர். இத்தகைய குணங்களால் உயர்ந்த செம்மல் மண்ணவர் இடையே பல்லாண்டுகள் இருத்தல் கூடாது என்று கருதிய விண்ணவர் அவரைத் தமராக்கிக் கொண்டு விட்டனர்.

நம் பெருந்தகையார் போல்வார் சிலரை அரிதின் முயன்று தேடிக் காண்டல் வேண்டும். மிக்கார் இவராவர்.

'கண்ணாலே கண்டவு ன் கைகள் தமைக்கூப்பி
அண்ணா வருக என அழைத்தே—நண்ணியதும்
பக்கல் இருத்திப் பரிவோ டுரையாடும்
மிக்கானைத் தோற்றூ மியாம்'

சேதுராமனார் திருப்பெயர் வாழ்க!



மறக்க முடியுமோ !

புலவர் முத்து, எத்திராசன், எம்.ஏ.,

ஆசிரியர், சென்னை.

நண்பர் வில்லியனூர் ந. வேங்கடேசனார் எழுதிச் சேகர் பதிப்பகம் பதிப்பித்த, 'வரலாற்றில் வில்லியனூர்' எனும் கல்வெட்டு ஆய்வு நூல் புதுவைத் திருமுடி சேதுராமனார் இல்லத்தில் (16 – 6 – 1979) விழா நடத்தி வெளியிடப் பெற்றது.

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் அறிஞர் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் நூலை வெளியிட்டுச் சிறப்புரை யாற்றினார்கள். அப்போதுதான் திருமுடியாரைக் காணும் பேறு பெற்றேன். அவர்தம் கலை யாற்றலை முன்பே நன்கு கேள்விப்பட்டேன்; அன்று அவரது வரவேற்புரையில் நேரில் கண்டு வியந்தேன்! மலைத்து நின்றேன்.

அவர்தம் விருந்தோம்பும் பாங்கினையும் கலந்துரை யாடும் சிறப்பினையும் உடனிருந்து துய்த்தேன். புதிதாய் அறிமுகமான என்னிடத்தும் அவர் மனங்கலந்து பழகிய பண்பாட்டினை நான் என்றும் மறக்க முடியாது.

நிறைவான தோற்றத்தாலும் அறிவார்ந்த உரையி னாலும் காண்போரைக் கவரும் திருமுடியார்தம் நினைவை மறக்க முடியுமோ? அவர் புகழ் வாழ்க!

அருங்கலை விநோதர்

டாக்டர் ஔவை நடராஜன்

இயக்குநர், மொழி பெயர்ப்பு (பொது)த்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை.

கலை இலக்கிய ஆர்வலராகவும், ஆய்வாளராகவும் அருங்கலை விநோதராகவும் திகழ்ந்த புதுவைப் பெருமகனார் திருமுடி. ந. சேதுராமனார் அவர்கள் மறைவு என்னைத் திடுக்கிட வைத்தது.

அனைவரிடமும் அன்போடுபழகும் பரிவும், உற்றுழி நண்பர்க்கு உதவும் திறமும்கொண்ட அண்ணல் சேதுரமனார் இலக்கிய ஆர்வத்தோடு, அரிய நுட்பங்களை ஆராய்ந்து தெரிந்து வைத்து அறிஞரோடு அளவளாவும் பண்பு வாய்ந்தவர். அவர் இழப்பு பெரிய வருத்தத்தைத் தருகிறது.

அவர் ஆராய்ந்து வைத்த கருத்துக்களையும், தொகுத்த செய்திகளையும்ஒருங்கு திரட்டி வெளியிடுவது அவர் நினைவைப் போற்றுதற்குரிய நிலையான செயலாகும். நண்பர் வெள்ளையாம்பட்டு சுந்தரனார் அப்பணியில் முன்னிற்க வேண்டுமெனப் பெரிதும் விரும்புகிறேன்.

கொதிக்கிறது நெஞ்சம் குற்றாலம் எங்கே?

மன்னர் மன்னன்

வானொலி நிலையம், புதுவை.

அந்த மழைக்கரம் புதிய சிந்தனையோட்டத்தில் என்னைக் கூட்டிச் சென்றது; அறிவுப் பயணம் செல்ல ஊக்குவித்தது; எழுத்துத் தொண்டு புரியத் தூண்டிற்று; அணுகு முறையில் இணக்கம் காட்டச் செய்தது; ஆய்வு நோக்கில் கூர்மையைப் புரிந்தது.

அந்த அன்பு ஒளி... எனக்கு மட்டுமா, என் போன்ற ஓராயிரம் பேருக்குத் திசை காட்டிற்று;

என் தந்தையாரின் குடும்ப விளக்கு — பிணக்குச் சூறுவளியில் சிக்கி விடாமல் காத்தது!

முன்பு—

பாவேந்தரின் நூல்களை வெளியிட முன்வந்த பாரத சத்திய நிலையம் பாலசுப்பிரமணியனின் மனக்குகையில் ஏதோ ஓர் இருள்! சட்டத்தின் விதியைச் சுட்டிக் காட்டிக் கவிஞர் மீது அச்சுறுத்தல் ஈட்டியை வீசிவிட்டார்.

திருமுடியார் வீடு ஒன்றில் இயங்கிக் கொண்டிருந்தது பாலசுப்பிரமணியத்தின் அச்சகம்.

திருமுடியார் இல்லத்தின் மற்றோர் புறத்திலிருந்த அச்சகத்துக்கு வாடிக்கையாகவே வருவார் பாரதிதாசன்.

அன்று—

'தம்பி'—என்ற குரலோடு பாலசுப்பிரமணியனார் தம் முறையீட்டை வெளியிட்டார்.

சிலிர்த்தெழுந்த சிங்கமாக உலவிக் கொண்டிருந்த பாவேந்தர் மீது ஏதோ ஓர் அன்புச் சாரல்பட்டது.

இருவரிடையே இருந்த பிணக்கு ஒய்ந்து குடும்ப விளக்கு நூலின் புதிய பதிப்பு வெளிவந்தது திருமுடியாரின் சீரிய பணியால்!

கொதிக்கின்ற பாலைவனத்தையே குற்றால அருவியாக்கி விடும் பேராற்றல் அந்த ஒருவருக்கு மட்டுமே உண்டு!

அந்தப் பெரிய உள்ளம், தொண்டுள்ளம், தூய உள்ளம்...

எங்கே, எங்கே?

அவர் வந்துதான் நம்மைத் தேற்ற முடியும்!

தமிழ்க் காவலர்

டாக்டர் க. த. திருநாவுக்கரசு

இணைப்பேராசிரியர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

நண்பர் திருவாளர் திருமுடி சேதுராமன் அவர்கள் மறைவினைச் செய்தித்தாளில் கண்டபோது அதிர்ச்சியுற்றேன். இவ்வளவு விரைவில் தமிழை —தமிழரை— தமிழகத்தை விட்டுப் பிரிந்துவிடுவார் என்று யாருமே எண்ணி இருக்க இயலாது!

செல்வம் படைத்த சிலர், புகழிற்காக, விளம்பரத்திற்காகத் தமிழ் ஆர்வலர்களாக—தொண்டர்களாக நடிப்பதை இன்றைய உலகில் காணுகின்றோம். நம் புதுவைத் தமிழ்க் காவலர் திரு. சேதுராமன் அவர்களிடம் நான் முதலில் கண்டது, முறுகிய தமிழ் உணர்வு! தமிழைப்பற்றியும், தமிழ்ப் பண்பாட்டைப்பற்றியும் பேசத் தொடங்கிவிட்டால் அவரே மெய் மறந்துவிடுவார்; கேட்போரைச் சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரைகளாக ஆக்கிவிடுவார். ஆழ்ந்த தமிழ்ப் புலமையும் பரந்துபட்ட அறிவும், கலையுணர்வும், நகைச்சுவையும் அவருடைய உரையாடல்களிலும், கருத்தரங்குகளிலும் கருத்தைக் கவரும்.

அவர் சிறப்புமிகு சுவைஞர்! தாம் சுவைத்ததை, மற்றவர்களும் எளிதில் சுவைத்து, மகிழுமாறு செய்வதில் திருமுடியார் கைதேர்ந்த கலைஞர்!

ருஷிய மொழியில் வெளியிடப்பட்டுள்ள திருக்குறளின் சிறப்பினை—ஒவ்வொரு குறளுக்கும் விளக்கப்படம் வரைந்து கருத்தினை விளக்கும் சிறப்பினை—என்னிடம் காட்டி மகிழ்ந்

தமை என் மனத்தில் இன்னும் பசுமையாக இருக்கிறது. இதற்கு முன்பே, நான் அந்நூலினைப் படித்துள்ளேன் என்பதனை அறிந்தபொழுது, என் தோள்களைத் தட்டி, 'உண்மையான திருக்குறள்தாசன் ஐயா நீங்கள்!' என்று அவர் பாராட்டிய அன்புள்ளத்தை இனி யாரிடம் காண்பது? அந்த ருஷிய மொழி பெயர்ப்பில், 'ஊழ்' எனும் அதிகாரத்தைச் சேர்க்காமல் விட்டுவிட்ட ருஷியர்களின் மனப்போக்கை அவர் வியந்த திறம் என் கண்முன் நிழலாடுகிறது!

நண்பர் திரு. சேதுராமன் அவர்களுடைய வரலாற்றுப் புலமையை — தமிழ் நாட்டின் கலைச்செல்வத்தைப்பற்றிய நுட்பமான அறிவை—வயிற்றுப் பிழைப்பு வரலாறு ஆய்வாளர்கள் இடத்தில் காண இயலாது.

கலைஞர்களை, புலவர்களை. ஆராய்ச்சியாளர்களைப் போற்றி ஆதரிப்பதில்—ஊக்குவிப்பதில் புதுவையின் பொன்மனச் செம்மலாருக்கு ஈடாக இன்று யாரைக் கூறுவது? அவரைக் காணும் போதெல்லாம் சங்ககாலப் பாரியையும், காரியையும், அதியமானையுமே நேரில் காண்பதாக நான் நினைத்தது உண்டு!

இன்று அவர் இல்லை! நாம் இருக்கின்றோம் அவரைப் புகழ்வதற்கு! 'என் நெஞ்சம் திறப்போர் தமிழைக் காண்குவரே!' எனும் உணர்வோடு வாழ்ந்து மறைந்த புதுவைப் பொன்மனச் செம்மலாரின் ஆன்மா அமைவு பெற, அம்பலவாணரின் திருவடிகளைப் போற்றி வணங்குகின்றேன்!

நீ இருந்து நாங்கள் மாய்ந்தால்...!

பாவலர் இராச. திருமாவளவன்

துணைச் செயலாளர்
புதுவை மாநில இலக்கிய அணி

அருந்தமிழ்க் கென்றிருந்த
'அமுதசுரபி' நீ உன்பால்
இருந்துண்ட புலவர் நாங்கள்
எங்குபோய்த் தமிழைக் கேட்போம்?
பெருந்தொண்டு வாழ்க்கை நீக்கிப்
பிரிந்ததேன்? உன்னை நாடி
வருந்தமிழ்ப் பசித்தோர்க் கூட்டம்
வாடிடும். ஏன்மறந்தாய்?

அருவியெம் கண்ணீர் கூட
அற்றிடக் கூடும்! ஆனல்
அருந்தமிழ்க் கண்ணீர் மாற்ற
ஆரினி உள்ளார்? வாழ்வை
இருந்துன்னல் பெறுவாள் என்றே
எண்ணிய நெஞ்சில் தீயாய்ப்
பெருந்துயர் தந்த துன்றன்
பெருமையோ! சரியோ? சொல்வாய்!

இரந்துவாழ் புலவர் நாங்கள்
இரப்பது தமிழுக் கன்றி
வருந்துமெம் வாழ்க்கைக் கன்று
வள்ளலே நீயிருந்தே
இரந்திடும் நாங்கள் மாய்ந்தால்
இன்தமிழ் வாழும் காலம்
அருந்திய துன்னு யிர்தான்
அளிசெய இனியரார் உள்ளார்?

வைரமுடி!

எஸ். கணேச செட்டியார்

வளவனூர்

புதுவைப் பிரதேச மக்கள் அனைவராலும், தமிழ் நாட்டின் பலதுறைப் புலவர்கள், அனுபவமிக்க அரசியல்வாதிகள் ஆகியோரில் பெரும்பான்மையோராலும் அறியப்பட்டு. நேரிடையாகப் பழக நேர்ந்த அனைத்துத் தரப்பினராலும், அன்புடன் உளமார நேசிக்கப்பட்டவர் நமது செட்டியாரவர்கள்.

பல்துறை அறிஞர்களாலும் சற்று தயக்கத்துடனும் மரியாதையுடனும் நெருங்கப்பட்ட அவர், தமது எளி வந்த தன்மையினால் என்னைப் போன்ற சாதாரணமானவர்களையும் புறக்கணிக்காமல் அரவணைத்தார்,

அவரது முன்னோர் விட்டுச் சென்ற பட்டம் ''திருமுடி!'' சென்னை சைவசித்தாந்த மகாசமாசத்தார் தங்களையும் அறியாமல் பொருத்தமாகக் கொடுத்த பட்டம் ''வைரமுடி!'' (சித்தாந்தம் 1978 ஜூன் இதழ் பார்க்க)

அவரை அறிந்தோர் அனைவரும் உள்ளத்தால் ஒப்ப முடிந்து அவரைப்பற்றி நினைக்கும் பட்டம், தொட்ட துறையிலெல்லாம் ''கொடுமுடி!''

அதுமட்டுமா, அவர் வணங்காமுடி.

திருமுடி இல்லத்தில் ஒருமுடி மன்னன்!

புலவர் தாமரைக் கண்ணன்

அச்சிறுபாக்கம்

திருமுடிச் செம்மல் இன்று இல்லை என்று எண்ணும் போது இதயம் ஓலமிடுகிறது. காணும்போதெல்லாம் நானும் சுவையாக உரையாடி மகிழ்ந்தேன்.

செட்டியார் அவர்கள் அறிவுச்சுடர்...சிந்தனைச் செம்மல் ...கொடை வள்ளல்...

வயிற்றுப் பசியா...? சோறு கிடைக்கும்!

அறிவுப் பசியா...? கேட்கும் அத்தனையும் கிடைக்கும்:

அகத்திக் கீரையின் பயன் முதல் அண்டசராசரத்தின் விளக்கம் வரை...

சங்க இலக்கியம் முதல் சரோஜாதேவிப் புத்தகம் வரை...

கோயில் கட்டடக் கலை முதல் கோழி வளர்ப்பு வரை...

அரசியல் கட்சிகளின் கொள்கை வேறுபாடு முதல் கூட்டணிக் கோமாளித்தனங்கள்வரை...

சுத்தமான ஆஸ்திகக் கருத்துகள்முதல் பக்கா நாஸ்திக வாதம் வரை...

ஆடல் பாடல் கலைகள் முதல் ஆண்டன் திருச்சந்நிதிகள் வரை...

விலங்குகளின் தன்மைமுதல் விவேகிகளின் அவிவேகம் வரை...

செட்டியாரிடம் எல்லா விவரங்களும் கிடைக்கும்.

ஆம்...

அமுதம் முதல் ஆலகால விஷம்வரை அவர் அறியாத துறைகளே இல்லை.

அவர்...

கலைஞர்களிடையே மா பெரும் கலைஞர்...

ரசிகர்களிடையே மாபெரும் ரசிகர்...!

கன்னித் தமிழ் அறிஞர்கள் தங்கி இளைப்பாறும் கற்பகத் தருவாக, வாட்டம் போக்கும் வள்ளலாக, மனிதர்களிடையே மாபெரும்? மனிதராக...

ஒரு: முடிசூடா மன்னனைப் போல திருமுடி அரண் மனையில் உலா வந்த, அந்தப் பெருந்தகையின் திருவுருவம் மண்ணில் மறைந்தது என்ருல் அது மாபாவம் ஆகும்!

அந்தத் திருவுருவம், சிந்திக்கத் தெரிந்த மனிதர்களின் உள்ளங்களில் அல்லவா, சங்கமமாகி இருக்கிறது?

ஒரு மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக வாழ்ந்த நம் பல்கலைச் செம்மலை எந் நாளும் நம் சிந்தையில் துதிக்கச் செய்து போற்றுவோமாக!

இறைமுடியில் திருமுடியார்

கோ. கிருட்டினமூர்த்தி, பி.ஏ.,

அனந்தபுரம்

"மனிதன் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தான் என்பதை விட அவன் எப்படி வாழ்ந்தான் என்பதுதான் முக்கியம்" இதற்கோர் எடுத்துக்காட்டு புதுவைத் திருமுடியார்.

எங்கள் செஞ்சிப் பகுதியின் செறுக்கள வீரன் சததுல்லா கான். இவனுக்கும் தேசிங்கு ராசனுக்கும், நடைபெற்ற போர்க்களக் காட்சி தமிழக வரலாற்றில் புகழ்பெற்ற ஒன்று. இவன் காலத்திய கல்வெட்டொன்றை, பனைமலையில் உள்ள பல்லவர் காலத்திய தாலகிரீசுவரர் திருக்கோயிலில் கண்டு அதனைப் பதிவு செய்து, வரலாற்று வல்லுநரான, திருமுடியாரின் திருமுன் வைத்தேன். அப்பதிவு பாகூர் சு. குப்புசாமி அவர்களால் படிக்கப்பட்டது.

"சததுல்லாகானின் படை வலிமையையும், தேசிங்கின் படை வலிமையையும் ஒப்பிட்டுக்காட்டி, தேசிங்கு இவனோடு முரண்பட்டது, எவ்வகையிலும் நீதியில்லை. தேசிங்கின் செயல் அனைத்தும் சிறுபிள்ளைத்தனமானவை என்பதை அவன் வரலாறு காட்டும். பத்து மாத காலமே ஆண்ட அவனிடம் ஒரு கவர்ச்சி இருந்தது. எனவேதான், நாட்டுப்புறப் பாடல்களிலும் அவன் பெயர் நிலைபெற்றது! ஆனால் மன்னனாக இருப்பதற்கு ஒரு தகுதியும் தந்திரமும் இவனிடம் இல்லையே!" என்று திறனார்ந்த கருத்தைத் தெரிவித்தார். "உன்பகுதி வரலாற்றை முதலில் ஒழுங்காகத் தெரிந்து கொள்ளுமய்யா?" என்று என்னைப் பார்த்து அன்றொரு நாள் கூறினரே! அந்த திருடியார் இன்று எங்கே?

இறைவன் திருமுடியை அலங்கரிக்கும் புதுவைத் திருமுடியே! நின் உருவம் என் நெஞ்சில் நீங்காது நிலைத்திருக்கும்!

நெஞ்சிருக்கும்வரை நினைவிருக்கும்

நா. வெங்கடேசன்

கல்வெட்டு ஆய்வாளர். வில்லியனூர்

என் ஞானத் தந்தை நடமாடும் பல்கலைக் கழகத்தை இழந்த நான் சிறகொடிந்த சிட்டானேன். இனி, வரலாற்றை வாழ்விப்பார், வழிகாட்டுவார் யார்?

திருவாண்டார்க் கோயிலுக்குள் அவர் ஒரு முதுமக்கள் தாழியைக் கண்டுபிடித்து, இத் திருக்கோயில் ஒரு மகானின் சமாதிக் கோயிலாக, பள்ளிப் படைக்கோயிலாக இருந்திருக்க வேண்டும் என்று என்றைக்கோ அவர் கூறிய கருத்து இன்றளவும் என் உள்ளத்தில் பசுமையாகப் பதிந்துள்ளது. அவர் நோக்கம் அக்கோயில் பற்றி ஆராயவேண்டும் என் பதை யான் அறிவேன். என் பணியைத் தொடங்கினேன். அவர்தம் பயணத்தைத் தொடங்கிவிட்டார்.

மதுரையில் 22-3-1979 அன்று இரவு 12 மணிக்கு என்னைப் பார்த்து, 'என்னடா, ''மேழிவான் கோத்திரம்'' என்பது யாரைக் குறிக்கும்? சிந்தனைச் செய்தாயா?' என்று கேட்டார். பணிவோடு விடையிறுத்தேன்—தெரியாது என்று.

''மேழி என்பது கலப்பை கலப்பையைப் படைக் கருவி யாகக் கொண்டவன் பலராமன். பலராமன் யாதவர் குலத்தில் தோன்றியவன். பலராமர் கோத்திரம்தான் மேழி வான் கோத்திரம் என்று விளக்கம் கூறினார். வில்லியனூர் வரலாற்றை நான் எழுதும்போது இப்படியெல்லாம் துணை நின்றார் என்பதை இன்று எண்ணிப் பார்க்கிறேன். இனி எனக்கு துணைசெய்ய வல்லார் யார்?

14-1-1979 அன்று நானும் என் நண்பர் பாகூர் சு. குப்புசாமியும் மரக்காணம் கல்வெட்டுகளை ஆராயச் சென்றோம். துய்ப்ளேயின் மனைவி கட்டிய மாதாக்கோயில் ஒன்று மரக்காணத்தில் இருந்தது. அக்கோயில் மணியில் கீழ்க்கண்டவாறு எழுதப்பெற்றிருந்தது.

SI, Voceme Jusaudieritis
Noliteovdurarbcordavestra A.D. 1927.

இதனைப் படித்துத் தெரிந்துகொள்ள இயலாத நிலையில், அப்படியே எழுதி வந்து திருமுடியாரிடம் காண்பித்தோம். உடனே அவர்,

"சிஓசேமே ழூசோதியே ரீத்திஸ்
ஞெலித் தேயோ வ்த்யுரார்தெக்கோர் தவேஸ்த்ரா"
என்று விரைவாகப் படித்துக் காட்டினார்.

அதற்கான விளக்கங்களைச் சொன்னார். இந்த மணி பிரான்சு நாட்டில் வார்க்கப் பெற்றது என்ற விபரத்தையும் சொன்னார். இதற்கெல்லாம் இனி நாங்கள் எங்கே போவோம்?

திருமுடியார் மரபுவழிப் பட்டியல்

